Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (6-6-66) இதழ் 119

பராபவ வைகாசி 24 ஸபர் 16 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன் 519
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### பிரிட்டிஷ் தளம் வாபஸாகும்?

லண்டன், ஜூன் 5

மலேஸியாவை நசுக்கும் இந்தோனேஷியாவின் கொள்கை முடிவடைந்து விட்டதால் தூரகிழக்கிலுள்ள பிரிட்டிஷ் துருப்புக்கள் திருப்பியழைக்கப்படும் என பாதுகாப்பு மந்திரி திரு. ஹீலி தெரிவித்தார்.

# பஸ் நிலைய சீரமைப்பு; அரசாங்கம் நிதி உதவி

## யாழ். நகர மின்சார விநியோகமும் சீராகும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நகரின் மத்திய பஸ் நிலையத்தை சீர்திருத்தி அமைக்கவும் பஸ் பிரயாணிகளுக்கு போதிய வசதிகளைச் செய்யவும் பழைய பஸ் நிலையத்திலேயே புதிய பஸ நிலையத்தை அமைக்கவும் யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ள விசேஷ மூவர் கமிஷன் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் பஸ நிலையச் சீரமைப்புக்காக அரசாங்கம் இருபதாயிரம ரூபாய் கொடுத்துதவவிருப்பதாகவும் உள்ளூராட்சி அமைச்சு வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

பஸ் நிலையத்தில் பிரயாணிகள் தங்கி நிற்பதற்கு வசதியான இடங்கள் அமைப்பதுடன் ஒவ்வொரு பஸ்ஸும் புறப்பட்டுச் செல்லுமிடங்களையும் புறப்படும் நேரத்தையும் ஒலிபெருக்கி மூலம் அந்தந்த நேரம் அறிவிப்பதற்கும் ஒழுங்குசெய்யப்படவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

### மின்சார விநியோகம்

யாழ்ப்பாணத்தில் அடிக்கடி ஏற்படும் மின்சாரக் கோளாறுகளுக்கான காரணத்தை அரசாங்க மின்சார இலாகா நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து அவற்றைச் சீர்திருத்துவதுடன் சரியானமுறையில் மின்சார விநியோகம் நடைபெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

வீதிப்போக்குவரத்து ஒழுங்கு முறைகளிலும் மாற்றம் செய்யப்படவிருப்பதாகத் தெரிகிறது, இவ்வாரத்துக்குள் பஸ் நிலைய, மின்சார விநியோக சீர்திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிகிறது.

முன்னைய மேயர்கள் தயாரித்த திட்டங்களை முற்றுக நிராகரிக்காமல் அவற்றின் நல்ல அம்சங்களையும் இச்சீரமைப்பு வேலையில் பயன்படுத்தப்படுமாம்.

## ‘‘எதிரிஎன்னைச் சுடுவதற்கு காரணம் எதுவும் இல்லை’

### பூநகரி கொலை முயற்சிவழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், செவ்வாய்

பூநகரி கொலைவழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச் டபிள்யூ தம்பையா கியூ சி முன்னிலையில் மூன்ருவது தினமாக விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது

காயமடைந்த சின்னையா ஐயம்பிள்ளை சாட்சியமளிக்கையில். சம்பவம் நடந்த இடத்திற்கு கிராமசேவகர் வந்தது தனக்குத் தெரியாதென்றும், அந்த நேரம் மயக்கமடைந்திருந்ததாகவும், காயத்திலிருந்து இரத்தம் ஓடிக்கொண்டிருந்ததாகவும் கூறினர்.

எதிரியின் வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபொழுது ஐயம்பிள்ளை கூறியதாவது: எதிரி என்னைச் சுடுவதற்கு ஒரு காரணமும் இல்லை. எதிரி சுடும் பொழுது அவரை நான் காணவில்லை. சூடுவிழுமுன்பு நான் எதிரியைக் காணவில்லை. எதிரியின் வளவிலிருந்து அவரது குரலைக் கேட்டேன்.

எதிரிசார்பில் ஆஜரான வழக்கறிஞர் கே வி எஸ் சண்முகநாதன் தமது தொகுப்புரையை ஆரம்பித்தார்

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தொகுப்புரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

## ரயில்பாதையால் சென்றவர் ரயிலுக்குப் பலியானர்

யாழ்ப்பாணம், திங்கள்

பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு ரயிலுக்கு 17 வயதுள்ள இளைஞன் ஒருவன் பலியானன். இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை புங்கங்குளம் ரயில் நிலையத்துக்கு அருகாமையில் நிகழ்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயில் புங்கங்குளம் ரயில் நிலையத்திற்கு அருகாமையில் வந்துகொண்டிருந்த பொழுது தண்டவாளத்தில் நடந்துவந்த செல்லையா கந்தசாமி என்னும் 17 வயது இளைஞன் ரயிலினல்மோதுண்டு அபாயகரமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் அங்கு காலமானர்.

யாழ்ப்பாணப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் தேவசகாயம் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர். யாழ்ப்பாணம் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் அங்கு விசாரணை நடத்திய பின் விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார். (ந நி)

விசாரணையின்போதுரயில் சாரதி ஞானப்பிரகாசம் சிறில் சாட்சியமளிக்கையில் 240-ம் கட்டையை ரயில் கடக்கும்பொழுது ஒருவர் ரயில் பாதையின் ஒருபுறத்திலிருந்து மறுபுறத்துக்குத் திடீரெனக் குறுக்கிட்டார் என்றும் ரயிலினல் தூக்கி எறியப்பட்ட அவரை பின்னர் தலைமைக் கார்ட்டின் உதவியுடன் ரயிலில் ஏற்றிச் சென்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்ததாகக் கூறினர்.

இறந்தவரின் தந்தை கணபதிப்பிள்ளை செல்லையாசாட்சியமளிக்கையில், இறந்த தமது மகன் வாய்பேசமாட்டார் என்றும் காதும் கேட்காதென்றும் சில காலமாக அவருக்கு மூளைக்கோளாறும் ஏற்பட்டிருந்ததென்றும் கூறினர்.

## விடுமுறை அழிக்கவந்த கேரளப் பிரஜை யாழ்ப்பாணத்தில் தீடீர் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள தமது சகோதரரைப் பார்ப்பதற்காக இந்தியாவிலிருந்து இங்கு வந்த ஒருவர் மாரடைப்பினல் நேற்று முன்தினம் காலமானர்.

இந்தியாவிலுள்ள கேரளத்தில் மின்சார பகுதியில் வேலைபாக்கும் கே ஏ காத என்பவர் யாழ்ப்பாணத்திலுள்ள தமது சகோதரரைப் பார்ப்பதற்காக சில நாட்களுக்கு முன்னர் இங்கு வந்திருந்தாரென்றும் மாரடைப்பு காரணமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சில தினங்கள் சிகிச்சை பெற்ற பின்னர் இம்மாதம் ஒன்பதாம் திகதி இந்தியா திரும்புவதற்கு ஆயத்தமாகவிருந்தார் என்றும் மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினமிரவு இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து ஆஸ்பத்திரியில்காலமானர். இவரது மரணம் குறித்து விசாரணைகள் நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் கனகரெத்தினம் மாரடைப்பினல் காலமானர் என்று தெரிவித்தார் டாக்டர் பி. வி. ஞானதுரையும் சாட்சியமளித்தார்.

இறந்தவருக்கு கேரளத்தில் மனைவியும் ஏழு குழந்தைகளும் இருக்கிறார்கள்.

## திருமதி ஸ்ரீமா பயணமானர்

கொழும்பு, ஞாயிறு

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேற்று பெல்கிரேட் பயணமானர். அங்கு நடைபெறும் சோஷலிஸ கட்சிகள் மகாநாட்டில் அவர் கலந்துகொள்வார்

லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் கொழும்பு தெற்கு ... டாக்டர் ... கொயிஸா இம்மகாநாட்டில் கலந்துகொள்கின்ருர்,

## ‘ஜனநாயகத்துக்கு மாருன செயல்’

### மாநகரசபை கலைக்கப்பட்டதை எதிர்த்து நடந்த கூட்டத்தில் துரையப்பா

யாழ்ப்பாணம். செவ்.

‘கொலைக் குற்றவாளிக்குக் கூட நீதிமன்றத்தில் தகுந்த விசாரணை நடைபெற்ற பின்பே தீர்ப்பளிக்கப்படுகிறது ஆனல் யாழ்ப்பாண மாநகர சபை எவ்வித விசாரணையுமின்றி, திடீரென கலைக்கப்பட்டது ஜனநாயகத்திற்கு முரணனது’.

கொழும்புத்துறை சந்திக்கருகில் நேற்று முன்தினம் மாநகரசபை கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து நடைபெற்ற ஒரு கூட்டத்தில் முன்ளுள் மேயர் திரு. ஏ. ரி. துரையப்பா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. எஸ். குழந்தைவேலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. துரையப்பா மேலும் கூறியதாவது:-

கொழும்புத்துறை வட்டாரத்தில் பைப் போட்டது பிழை எனச்சிலர் கூறுகிறார்கள், ஏற்கனவே இருந்த மேயர்களால் புறக்கணிக்கப்பட்ட கொழும்புத்துறை வட்டார மக்களின் கஷ்டத்தை நீக்கவிரும்பினேன். அது பிழையானல் என்மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். மற்றும் ஸ்தல ஸ்தாபன சபைகளை கலைக்கமுன் விசாரணை நடத்தியது போல ஏன் இங்கு செய்யவில்லை? திருக்கோணமலை, நல்லூர் மற்றும் இடங்களில் விசாரணை நடைபெற்

(5ம் பக்கம் பார்க்க)

மலைமகள் மருத்துவ மனைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் பராபவஸூ வைகாசிமீ 26வ (8-6-66) புதன்கிழமை பகல் 10 மணி 39 நிமிஷந் தொடக்கம் 11 மணி 48 நிமிஷம் வரையுமுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில் இறை இன்னருளால் புதிதாக அமைக்கப்பெற்ற ‘‘மலைமகள் மருத்துவமனை’’ என்னும் பெயர் பெற்ற சுதேசவைத்தியசாலையை ஆரம்பித்து வைக்கப் பெரியோர்கள் ஆசியுடன் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சமுகந்தந்து ஆசிவழங்கிச் சந்தோஷங் கொண்டாடி ஏகுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

(கொண்டாட்டம் நான்கு நாட்கள்வரை நடைபெறும்

இவ்வணம்,

தங்கள் நல்வரவை நாடும்

வீ. பஞ்சாட்சரம்

வைத்திய கலாநிதி

D. I. M. S. (CEY.)

யாழ்-பலாலி வீதி,
பலாலி,
காங்கேசன்துறை,
6-6-66. 458

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பையன்கள்

பஸ் நிலையத்திலும் றயில்வே ஸ்ரேசனிலும் மற்றும் இடங்களிலும் பத்திரிகை, சஞ்சிகைகள் விற்பனை செய்யக்கூடிய பையன்கள் தேவை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். பூபாலசிங்கம் புத்தகசாலை, 57, பெரியகடை, பஸ்நிலைய முன்பு, யாழ்ப்பாணம். 529

ஆசிரியை

பாலர் பாடசாலைக்கு உதவி ஆசிரியை தேவை. 10-6-66க்கு முன் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும். 75, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 528

ஆள்தேவை

மிளகாய்த்தூள் நன்றாக அரைக்கத்தெரிந்த ஆள் தேவை விபரங்களுக்கு கே. ஆர். லிங்கம் மில்ஸ், நீராவியடி, யாழ்ப்பாணம். 526

REGAL—JAFFNA
NOW SHOWING!
VINCENT PRICE
in
THE PIT AND THE PENDULUM
(Cinemascope - color)
(ADULTS ONLY)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ரங்கராவ் - பானுமதி
நடித்த
அன்னை

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
முத்துராமன் - சந்திரகாந்தா
நடித்த
தெய்வத்திருமகள்


# காமன்வெல்த்எயர்லைன்ஸ்மகாநாடு

லண்டன், ஜூன் 5

காமன்வெல்த் 'எயர்லைன்ஸ்' மகாநாடு பிரிட்டனில் தென்கரையோரப் பகுதியிலுள்ள பூர்ணிமவுத் என்னுமிடத்தில் நேற்று ஆரம்பமானது. இம்மகாநாட்டில் 21 நாடுகள் பங்குபற்றுகின்றன. இலங்கையும் இம்மாநாட்டுக்கென தூதுகோஷ்டி ஒன்றை அனுப்பவிருக்கிறது:

இலங்கைப் போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. கே. விக்கிரமா, இலங்கை எயர் சிலோன் அதிபர் திரு. வி. ரி. டி. சொய்ஸா ஆகியோர் இலங்கையின் சார்பாக கலந்துகொள்கின்றார்கள்

பிரிட்டிஷ் விமானசேவை உதவிமந்திரி திரு. ஜாவியன் சினே தலைமையில் இம்மாநாடு நடைபெறும்.

# பிரிட்டிஷ் படத்தில் இலங்கை காட்சிகள்

லண்டன், ஜூன் 5

இலங்கையின் தெங்குப் பொருள் உற்பத்தி, இலங்கையின் பாரம்பரிய மீன்பிடி தொழில் முறைகள், கருவாடு பதனிடுதல் ஆகியவை பற்றி இப்பொழுது இலங்கையில் படம்பிடிக்கப்பட்டு வருகின்றன,

பிரிட்டனின் உஷ்ண பிராந்திய உற்பத்தி ஸ்தாபனத்தின் தொழில்முறைகளை விளக்கும் விபரணைப்படமாகவே இது உருவாகிறது.

இலங்கையின் தகவல் இலாகாவினது அனுசரணையுடன் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சு இந்தப் படப்பிடிப்பு வேலைகளைமேற் கொண்டிருக்கிறது,

லண்டனிலுள்ள தொழில் நுட்ப, விஞ்ஞான பிலிம்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. ரி. வி. எச். பிச்ஹியூ இந்தப் படத்தை டைரக் செய்கிறார் இவ்வார ஆரம்பத்தில் அவர் இலங்கை வந்து சேர்ந்தார்.

## குருபூசை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் குருபூசை மடத்தில் திருஞானசம்பந்தர்குருபூசை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திருமுறை ஓதலும், விசேட பூசைகளும் நடைபெற்றன. இங்குள்ள அனேகபாடசாலை மாணவர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

## மாதர்முன்னேற்ற சங்கம்

கிளிநொச்சி, ஞாயிறு

மகாலட்சுமி மாதர்முன்னேற்றச்சங்க வருடாந்தக் கூட்டம் வன்னேரிக்குள கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் துணுக்காய் காரியாதிகாரி திரு. மா. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

காரியாதிகாரி திரு. மா. இராசத்தினம், திரு. க. கிருஷ்ணபிள்ளை, திரு. செ. உலகநாதன் ஆகியோர் உட்பட பலர் பேசினர். இவ்வைபவத்தில் திரு. ஆர். கனகசபாபதி, திரு. எஸ் துரைச்சாமி, திரு, பி. பாலசிங்கம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக்கலந்துகொண்டனர்.

புதுவருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:

தலைவி- திருமதி பொ. இராசம்மா, உபதலைவி- திருமதி பெ. காமாட்சி, காரியதரிசி: திருமதி தி. நாகம்மா, உபகாரியதரிசி- செல்வி க. சிவபாக்கியம், தனதிகாரி- திருமதி க. சின்னத்தங்கம், நிர்வாகஅங்கத்தவர்கள்: திருமதிகள் சு. காமாட்சி, ச. செல்லம்மா, க. தெய்வானைப்பிள்ளை, செ. அன்னம்மா, செல்வி ஆ. பராசக்தி, செல்வி க. இராசேஸ்வரி.




## கொழும்பு
### திங்கள் 6 - 6 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை—சுகாதார பேச்சு, 6-45 இசைக்கச்சேரி - பகவதி இரங்கராஜன் & கமலா கரிகர ஐயர், 7-45 பல்கலைப் பகுதி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 தமிழ்மூலம் சிங்களம் — 9-45 ... நேயர் விருப்பம், 10-00 நேயர் விருப்பம்


# விளம்பரம்

## மனேஜர் தேவை

கோண்டாவில் ப.நோ கூ. சங்கத்துக்கு மனேஜர் தேவை தகமை: G. C. E. 6 பாடங்களில் சித்தியடைந்தவரும் கூட்டுறவுப்பயிற்சியும் விரும்பத்தக்கது. வயது 35க்குட்பட்டவர்கள்சமீபத்திற்பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 15-6-66-க்கு முன் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கலாம். பிணை: ரொக்கம் ரூபா 1000/- ஆதனம் ரூபா 2000/- சம்பளம் மாசம் ரூபா 100/- ஆரம்பம். முகவரி:—

சி. பொன்னம்பலம்,
கௌரவகாரியதரிசி,
கோண்டாவில் ப.நோ.கூ. சங்கம்
467 கோண்டாவில்.

## சாவகச்சேரி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### பண்டகசாலை மனேச்சர்தேவை

மேற்படி பண்டகசாலைக்கு ஒரு மனேச்சர் தேவை. விரும்புவோர் 20-6-66 காலை 10 மணிக்கு முன்னதாக பதிவுத் தபாலில் பண்டகசாலை மனேச்சர் விண்ணப்பம் கௌரவ காரியதரிசி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி வடக்கு என்னும் விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல்வேண்டும்.

(1) வயது: 25—40-க்கு இடையாக இருத்தல்வேண்டும். (2) கூட்டுறவுப் பயிற்சி உடையவராகவும். அனுபவம் வாய்ந்தவராகவும் இருத்தல்வேண்டும். (3) பெண்பாலாரும் இடம்பெறலாம். (4) பிணை ரொக்கம் ரூபா 1000/- ஆதனம் ரூபா 2000/-, (5) சம்பளம் ரூபா 100/-. (6) அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.

வ. சின்னத்துரை,
கௌரவ காரியதர்சி.
469

## கேள்வி விளம்பரம்

புலோப்பளைக் கிராமசபை அக்கிராசனரால் மல்வில், முகாவில் றோட்டு அமைப்பதற்கு கேள்விகள் 22-6-66 காலை 9-30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ள விரும்புவோர் ரெண்டர் பிணையாக ரூபா 50/-ம் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5/-ம் கட்ட வேண்டும். கேள்விப்பத்திரப்பணம் ரூபா 5/- திருப்பிக் கொடுபட மாட்டாது. கேள்விப்பத்திரம் 20-6-66த் திகதி பிற்பகல் 3 மணிவரையும் வழங்கப்படும் மறு விபரங்களைக் கிராமசபைக் கந்தோரில் அறிந்து கொள்ளவும்.

(ஒப்பம்) அ. ஜோ. இராயசூரியர்
அக்கிராசனர்

கிராம சபை,
புலோப்பளை,
பளை.
5-6-66 470

## காரியதரிசி தேவை

I. தகுதி
(அ) வயது 30—45
(ஆ) அறிவு: எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தி—ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் கடிதத்தொடர்பு கொள்ளுதல்.
(இ) அனுபவம்: பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நிருவாகத்திலும், சங்கக்கணக்கு வைத்திருப்பதிலும் போதிய அனுபவம்.
சிறு கைத்தொழில் ஒப்பந்தவேலை முதலியவற்றை மேற்பார்வை செய்தல்.
II. சம்பளம்: மாதம் ரூபா 100/- தொடக்கம் ரூபா 150/- வரை (படிகள் உட்பட) தகுதிக்கேற்ப.
III. விண்ணப்பமுடிவுநாள்: 20-6-66 நண்பகல்.

தலைவர்,
அரியாலை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
500, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். 468


## 'ஒழுக்கமில்லாத கல்வி பயன் தராது'

சுழிபுரம், ஞாயிறு

பொதுமறை தந்த வள்ளுவரின் முப்பால் வழி ஒழுகின் உலகில் அன்பும் அறனும் பெருகும். உலக சமாதானத்துக்கும் முப்பாலே வழி வகுக்கும்" என பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை கல்லூரி முத்தமிழ்மன்ற ஆதரவில் நடைபெற்ற வள்ளுவர் விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில், தமிழ்மறை ஓதுவதாலும், பொருள் உணர்வதாலும் ஓதக்கேட்பதாலும் மனிதன் தூய்மை யடைந்து புது வாழ்வு பெறுகிறான். தமிழ் மறையோதி நல்வாழ்வு பெற இப்பொழுதே மாணவர் முயலவேண்டும்என்றார்

பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியதிபர் திருமதி காயத்திரி கணேசன் பேசுகையில் ஒழுக்கமில்லாத கல்வி பயன் தராது. ஆகவே மாணவர்கள் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாகப் போற்றவேண்டும் எனக் குறிப்பிட்டார். பண்டிதர் அ. ஆறுமுகம், திரு. மு. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் உட்பட மேலும்பலர் பேசினர்.

## சுகாதார விழா

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்புப்பகுதியில் இம்முறை வெகுவிமரிசையாக சுகாதாரவிழா கொண்டாடப்படவிருக்கிறது. அனேகமாக இவ்விழா அடுத்தவார முற்பகுதியில் கொண்டாடப்படும் எனத் தெரியவருகின்றது. சொற்பொழிவுகள் கலைநிகழ்ச்சிகள் ஆகியன விழாவில்இடம் பெறும்,

## ஆங்கில ஆசிரியர்கள் இல்லை

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் தற்பொழுது ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் கஷ்டப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்பாடசாலையில் கடமையாற்றிய ஆங்கில ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டபின்னர் இன்னமும் ஒருவரும் இப்பதவிகளுக்கு நியமிக்கப்படவில்லை எனத்தெரியவருகிறது.

## மக்கள் ஏமாற்றம்

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவில் பல நெசவு ஆசிரியர்களும் நெசவுவேலை தெரிந்தமாணவர்களும் இருந்தும்வருவாய் குறைந்த இத்தீவுக்கு ஒரு நெசவுசாலையை அரசாங்கம் அமைக்காததையிட்டு மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். தீவுப்பகுதிக்கு 7 நெசவுசாலைகள் கொடுக்கப்பட்டிருந்தும் ஒன்றுகுதல் நெடுந்தீவில் அமைக்கப்படாததையிட்டு பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர்.

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். இலக்கிய கூட்டத்தினர் திருவள்ளுவர் விழாவை இன்று மாலை 5-30 மணிக்கு யாழ். மாநகரசபை பொழுதுபோக்குச் சங்க மண்டபத்தில் கொண்டாடுவர்.

விழாவில் கவியரங்கும் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமுவீஸ்
தெய்வத்தாய்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'மாஸேதுங்கை எதிர்ப்பவர்கள் தப்பமுடியாது'

## 'பீபிள்ஸ்டெய்லி' எச்சரிக்கை

## பிரதமர் சூ! அதிபர் லியூசீஷா இடையேஅதிகாரப்போராட்டம்?

### வீழ்த்தப்பட்ட பெங் சென்னின் நிலைபற்றி இன்னும் தெரியவில்லை

பீகிங், ஜூன் 5

பதவியிலிருந்து நீககப்பட்ட பீகிங் மேயரும், கம்யூனிஸ்ட் கட்சியின் பீகிங் பிரிவு முதல் காரியதரிசியுமான பெங்சென் என்னவானுர் என்பது இதுவரை தெரியவில்லை. அதேசமயம் மாசேதுங்கை எதிர்ப்பவர்கள் எவராய் இருந்தாலும், அவர்கள் எத்தகைய உயர் அந்தஸ்தில் இருந்தாலும் தப்பமுடியாதென பீகிங் பீபிள்ஸ் டெய்லி' பத்திரிகை தனது தலையங்கத்தில் எச்சரித்திருக்கிறது.

மாவின் கொள்கையை எதிப்பவர்களில் சக்திவாய்ந்த பல பிரபல கம்யூனிஸ்டுகள் இருக்கிருர்களெனக் கூறப்படுகிறது.

இப்படிப்பட்டவர்கள் எவரும் தப்ப முடியாதென்றும் சீனுவில் முதலாளித்துவத்தைக் கொண்டுவருவதற்காக, கட்சிக்குள் ஊடுருவிய சோஷலிஸ விரோதிகளே அவர்கள் என்றும் அரசாங்கத்தின் நிலையைப் பிரதிபலிக்கும் 'பீபிள்ஸ் டெய்லி" கூறியுள்ளது.

கட்சியில் 5 சத விகிதம் கொள்கை திருத்தவாதிகள் இருக்கிருர்கள் என்றும் அது கூறியது.

சீனுவின் 16 ஆண்டு கம்யூனிஸ்ட் ஆட்சியில் முதல் முதல் பதவியிழந்த உயர் தலைவர்களில் ஒருவரான பெங்சென், கட்சிக்குவிரோதமான கொள்கையைக் கடைப்பிடித்தார் எனக் கூறப்பட்டது.

இப்போது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் கட்டத்தில் அதிகாரப் போராட்டம் நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது. பெங்சென் வீழ்த்தப்பட்டது, ஜனுதிபதி லியூஷாசிக்கு ஏற்பட்ட ஒரு அரசியல் தோல்வி என வருணிக்கப்படுகிறது. சென் இப்போது அதிபரின் அடைக்கலத்திலிருப்பதாகவும் ஒரு தகவல் கூறுகிறது.

பிரதமர் சூ-என்-லாய்க்கும் அதிபர் லியூஷாசிக்கும் இடையே ஏற்பட்டுவரும் அதிகாரப் போட்டியின்விளைவே பெங்சென்னின் பதவிநீக்கத்துக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

விரைவில் மேலும் பல உயர் தலைவர்கள் வீழ்த்தப்படக்கூடுமென வதந்திகள் நிலவுகின்றன.

---

## தென் வியட்னுமுக்கு ஐ. நா. பார்வையாளர்களா?

### வட வியட்னும் கண்டனம்

ஹானேய், ஜூன் 5

தென்வியட்னுமில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலைப் பார்வையிட ஐ. நா. பார்வையாளர்களை அனுப்புவதற்கு அதிகாரம் கிடையாதுஎன்றும், ஐ நா இந்த விஷயத்தில் தலையிட முடியாது என்றும்வடவியட்னும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் தென் வியட்னுமில் தற்கொலைச் சம்பவங்கள் 9 ஆக அதிகரித்திருக்கிறது.

கீ அரசாங்கத்தை எதிர்ப்பதாகக் கூறப்படும் செல்வாக்குள்ள 12 பேர் நேற்று சைகோனில் கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ராணுவஅரசாங்கத்துடன் ஒத்துழைக்கத் தயாராய் இருப்பதாயும், ஆனுல் அதற்குமுன் கீ பதவியிலிருந்து ராஜினுமா செய்ய வேண்டும் என்றும் பல பௌத்தர்கள் நேற்று வற்புறுத்திஞர்கள்.

நேற்று வடவியட்னும்மீது 90 தடவை அமெரிக்கவிமானங்கள் தாக்கின என்றும் அறிவிக்கப்பட்டது.

தென்வியட்னுமில் வியட்காங்மீது நடத்திய விமானத் தாக்குதலின்போது, 2 அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன.

அதேசமயம் காட்டுப்பகுதியில் நடைபெற்ற நிலச் சண்டை ஒன்றில் தென் கொரியத் துருப்புக்கள், 70 வியட்காங்கியரைக் கொன்றதாக அறிவிக்கப்பட்டது.

---

## அரசியல் கட்சிகளின் ரேடியோ தேர்தல் பிரசாரம்

### இந்திய தேர்தல் கமிஷன் மீண்டும் முயற்சி

புதுடில்லி, ஜூன் 5

அடுத்த பொதுத் தேர்தலையொட்டி அகில இந்திய ரேடியோவில் தேர்தல் பிரசார ஒலிபரப்புக்களை அனுமதிப்பதுபற்றிப் பரிசீலிக்க அகில இந்திய தன்மை வாய்ந்த அரசியல் கட்சிகள் மகாநாடு ஒன்றை விரைவில் நடத்த தேர்தல் கமிஷனர் உத்தேசித்திருக்கிருர்.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கு ரேடியோமூலம் பிரசாரம் செய்வதற்கு இடமளிக்கும் விஷயம், 1952-ம் ஆண்டு முதலாவது பொதுத்தேர்தலின்போதே கமிஷனரின் கவனத்தில் இருந்தது. 1962 தேர்தல் சமயத்தில் இது குறித்து கமிஷன் ஒரு ஏற்பாட்டுக்கு வந்ததென்றும், ஆனுல் சில எதிர்க்கட்சிகளின் ஆட்சேபம் காரணமாக இது அமுலாகவில்லை என்றும் கூறப்பட்டது. தேர்தல் பிரசார ஒலிபரப்புக்களின் பிரதிகளை கட்சிகள் அரசாங்கத்துக்கு முன்கூட்டியே அனுப்பிவிட வேண்டும் என்ற நிபந்தனைகளை எதிர்க்கட்சிகள் அப்போது ஏற்கவில்லை.

1962-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போதும் அகில இந்திய கட்சிகளைக் கலந்தாலோசித்து தேர்தல் கமிஷன் ஒருதிட்டம் வகுத்தது. காங்கிரஸ், பிரஜாசோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட், ஜனசங்கம், சம்யுக்த சோஷலிஸ்ட், சுதந்திரா ஆகிய 6 அரசியல் கட்சிகளுக்கும் சமஒலிபரப்பு நேரம் தரப்பட்டது. காங்கிரஸ்தான் பெரிய கட்சியாகவும் ஆளும் கட்சியாகவும் இருப்பதால் மற்ற அரசியல் கட்சிகளின் ஒலிபரப்புக்கு பிறகு, பதில் சொல்லும் உரிமை காங்கிரசுக்குத்தான் அளிக்கப்பட வேண்டும் என்ற யோசனையை சில எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொண்டன. இதர சில கட்சிகள் எதிர்த்தன. இதனுல் இத்திட்டம் அமுலாகவில்லை.

---

இந்தியாவில் தேர்தல்வெடி

## மொரார்ஜி ராஜினுமா செய்வாராம்

பம்பாய், ஜூன் 5

''வலதுசாரி கம்யூனிஸ்டுகள் காங்கிரசில் சேர்ந்தால் காங்கிரஸ் ஸ்தாபனம், கம்யூனிஸ்ட் கட்சியாகிவிடும். அப்படி ஏற்பட்டால் நிச்சயமாக நான் காங்கிரசில் இருக்கமாட்டேன்.

ஒரேமாதிரியான கொள்கைகள் இல்லாத கட்சிகள் ஒன்றுசேருவதில் ஒரு அர்த்தமும் இல்லை. பிரஜாசோஷலிஸ்ட்கட்சி சம்பந்தப்பட்டவரையில் அவர்கள் காங்கிரசுடன் சேர்ந்து வேலை செய்யலாம்.''

மொரார்ஜிதேசாய் பத்திரிகைநிருபர்களிடம் பேசியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

''காங்கிரஸ் ஆட்சியில் ஏழைகள் மேலும் ஏழைகளாகின்றனர். பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகின்றனர். கள்ளமார்க்கெட் வளர்ந்து வருகிறது. விவசாயஉற்பத்தி குறைந்து வருகிறது. செலவுகள் அதிகரித்துவருகின்றன. விலைவாசியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது.''

எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீ நெடுஞ்செழியன் விழுப்புரம் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

''முரண்பாடான கொள்கைகளை உடைய எதிர்க்கட்சிகள் தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிக்கவேண்டும் என்ற ஒரேநோக்கில் கூடமுயல்கின்றன. இவைகள் வென்ருல் நாட்டில் குழப்பமே ஏற்படும்.''

புதுப்பாக்கத்தில் நடைபெற்றநேருவரக்கூட்டத்தில் துணைமந்திரி அழகேசன் இவ்வாறு கூறினுர்.

ஃ ஃ ஃ

''1957-ம் ஆண்டு தேர்தலில் சுதந்திரக்கட்சியுடன் தேர்தல் ஏற்பாடு செய்துகொள்ளாமல் ஜனசங்கம் மட்டும் அதிகாரத்தைக் கைப்பற்றமுடியாது. தானில் அதிகாரத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு சுதந்திரா—ஜனசங்க கூட்டின் மூலம் சாத்தியம்.''

அகில இந்திய ஜனசங்க காரியதரிசி ஸ்ரீ சுந்தர்சிங் பண்டாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

---

## பஞ்சாப் எல்லைக் கமிஷன் அறிக்கை

புதுடில்லி, ஜூன் 5

பஞ்சாப்எல்லைக் கமிஷன் அறிக்கை குறித்துப் பிரதமர் ஸ்ரீமதி காந்தி, நேற்று உள்நாட்டு மந்திரி திரு. குலசாரிலால் நந்தா, காங்கிரஸ் அதிபர் காமராஜ் ஆகியோருடன் பூர்வாங்கமாக விவாதித்தார்.

இதுபற்றி இறுதி முடிவு செய்யப்படுமுன் தொடர்ச்சியான பல கூட்டங்கள் நடைபெறுமென திரு. நந்தா பின்பு கூறினுர்.

---

## இன்று பூமிக்குத் திரும்புவர்

கேப்கென்னடி, ஜூன் 5

அமெரிக்க 'ஜெமினி 9' வான்வெளிப் பிரயாணிகள் தொடர்பு ராக்கெட்டுடன் இணையும் முயற்சியை இறுதியாகக் கைவிட்டுவிட்டார்கள். மும்முறை இந்த ராக்கெட்டை நெருங்கியும் பயனேற்படவில்லை என அறிவிக்கப்படுகிறது. நாளை அவர்கள் பூமிக்குத் திரும்புவார்கள்.

---

## தென்னுபிரிக்காவில் கென்னடி

ஜொகானஸ்பேர்க் ஜூன் 5

முன்னுள் அமெரிக்க ஜனுதிபதி கென்னடியின் சகோதரர் ராபர்ட் கென்னடிக்கு இங்கு பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் ஆரவாரமான வரவேற்பளித்தனர். பல இனத்தினரையும் கொண்ட மாணவர் யூனியன் அழைப்பின்பேரில் ராபர்ட் கென்னடி தென்னுபிரிக்கா வந்திருக்கிருர். ஆனுல் அரசாங்க ஆதரவாளர்கள் அவரது பேச்சைக் குழப்பப் பலமுறை தலையிட்டனர்.

---

## எண்ணெய்க் குழாயை தகர்த்தனர்

ஏடன், ஜூன் 5

தென் அரேபிய சம்மேளனத்தில் ஏடனுக்குச் செல்லும் பிரதான எண்ணெய்க் குழாயைத் தேசியவாதிகள் தகர்த்துவிட்டார்கள் என அறிவிக்கப்படுகிறது.

---

## கெய்ரோவில் தினேஷ்சிங்

கெய்ரோ, ஜூன் 5

இந்திய வெளிநாட்டு ராஜாங்க மந்திரி திரு. தினேஷ்சிங் ஜனுதிபதி நாஸரைச் சந்தித்துப் பேசினுர். பிரதமர் இந்திராவின் சொந்தக் கடிதமொன்றையும் அவர் ஜனுதிபதியிடம் ஒப்படைத்தார்.

---

## சுகர்னே பரிசீலனை

ஜாகர்த்தா, ஜூன் 5

இந்தோனேஷியாவுக்கும் மலேஷியாவுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்த யோசனைகளை ஜனுதிபதி சுகர்னே பரிசீலித்துக் கொண்டிருக்கிருரென்றும், தேசியசபை இதை அங்கீகரிக்கவேண்டுமென்றும் கூறப்படுகிறது.

---

## காஞ்சி குருவின் 73வது ஜெயந்தி

வேலூர், ஜூன் 5

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் 73வது ஜயந்திதின விழா இங்கு நேற்று முன் தினம் கொண்டாடப்பட்டது.

---

## கனவில் தோன்றிய கணவன்...

திருமலை, ஜூன் 5

காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரி கடைசியாகத் திருப்திபக்கு வந்திருந்தசமயம், ஏழுமலையான் முன்பாகச் செய்துகொண்ட ஒரு பிரார்த்தனையை நிறைவேற்ற அவரது மனைவி ஸ்ரீமதி லலிதா சாஸ்திரி திருப்பதி வந்திருந்தார்.

டாஷ்கண்டில் இந்தோ-பாகிஸ்தான் பேச்சு வெற்றி பெற்ருல் மீண்டும் திருப்பதிக்கு வந்து பூஜை நடத்துவதாக சாஸ்திரி அப்போது பிரார்த்தனை செய்து கொண்டார். ஆனுல் நாடு திரும்புமுன் அவர் காலமாகிவிட்டார்.

சில தினங்களுக்கு முன் கனவில் தோன்றி, பிரார்த்தனை பூர்த்தி செய்யப்படாததைத் தனது கணவர் நினைவூட்டியதாக தேவஸ்தான அதிபர்களிடம் ஸ்ரீமதி லலிதா கூறினுர் என்றும், சமீபத்தில் தான் மேற்கொண்டுள்ள தொண்டுப்பணியை நடத்த ஏழுமலையான் கருணைபெறும்பொருட்டு ஆண்டுதோறும் திருப்திவருவதாக அவர் பிரார்த்தனை செய்துகொண்டார் எனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மதுபானம் பாம்புக்கடியைவிட ஆபத்தானது. விஷம் உடலைத்தான் கொல்லும். ஆனால் மதுவோ ஆத்மாவையே கெடுத்துவிடும். நல்ல சிற்றுண்டிச்சாலைகளையும், விளையாட்டுகளையும் ஏற்படுத்தினுல் தொழிலாளர் மனதைக் குடியிலிருந்து திருப்பிவிடலாம். —மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELA NADU, National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Phone: 349

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 24 உ (6-6-66)


## சுகாதாரவாரம்

இப்பொழுது இலங்கையில் சுகாதார விழா நடைபெறுகிறது. நேற்று ஆரம்பமான சுகாதார வாரம் இம்மாதம் 11-ந் திகதியுடன் முடிவடைகிறது. நாட்டின் முன்னேற்றம், சுபீட்சம், சுகவாழ்வு ஆகியவற்றிற்குப் பயமுறுத்தல் விடுத்துக்கொண்டிருக்கும் ஜனப்பெருக்கம் பற்றி இந்த முறை சுகாதார வாரத்தின் போது எடுத்துக்காட்டப்படுகிறது. அதாவது திட்டமிட்ட குடும்ப வாழ்க்கைதான் இவ்வருடத்திய சுகாதார விழாவின் முக்கிய அம்சம்.

சுகாதாரம் மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியம்' அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டியதுமாகும். வசதிக் குறைவு, கவனக் குறைவு காரணமாக சுகாதாரத்தைப் பேணுவதில் மக்கள் டலர் அசிரத்தையாக இருந்துவிடுகின்றனர். மக்களின் கவனத்தைக் கவரவும் அவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவுமே வருடத்தில் ஒருமுறை சுகாதார விழா கொண்டாடப்படுகிறது.

ஜனத்தொகைப் பெருக்கம் அதிகரித்துவருமளவிற்கு உணவு உற்பத்தியும் மற்றும் பொருளாதார வசதிகளும் அதிகரிக்கவில்லை. இது எங்கள் நாட்டில் மட்டுமல்ல இதர பல நாடுகளிலும் உள்ள பிரச்சினைதான். ஆனால் எங்கள் நாடு கடலால் சூழப்பட்ட சிறிய தீவாகும். ஜனத்தொகை அதிகரித்துவருவதற்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்கவும் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும் நமக்கு ஆற்றலிருப்பினும் இடவசதிக் கஷ்டம் ஏற்படும். இதனால்தான் ஜனத்தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டியது அவசியமாகிறது. நமது நாட்டின் பொருளாதாரத்தின் பெரும் பகுதி மக்களின் கல்வி, சுகாதாரம், சமூக சேவை ஆகியவற்றிற்குச் செலவாகிவிடுகிறது. இதனால் அபிவிருத்தித்திட்டங்களுக்கோ, இதர பொருளாதார விருத்தித் திட்டங்களுக்கோ செலவிடமுடியாது. இந்நிலையில் ஜனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டியது அவசியம்தான்.

வருவாய் குறைந்த குடும்பத்தில் அதிகபிள்ளைகள் இருந்தால் பிள்ளைகள் உடலுறுதியுடையவர்களாக வளர முடியாது; குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவாது. சில சோஷலிஸ்ட் நாடுகளில் அதிக குழந்தைகள் பெறும் குடும்பத்துக்கு பரிசும் வழங்குவதுடன், குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்கின்றன. அந்த நாடுகளின் விஸ்தீரணமும் மூலவளங்களும் இதற்கு இடம் கொடுக்கலாம்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் திட்டமிட்ட குடும்ப வாழ்க்கை அவசியம். இதற்கு அரசாங்கத்தின் உதவியை மட்டுமே நம்பியிருப்பது சரியல்ல. மக்கள் தாங்களாகவே தமது வாழ்க்கை முறையைத் திட்டமிட்டு நடத்த வேண்டும். இம்முறை சுகாதாரவாரவிழா இதற்கு வழிகாட்ட வேண்டும்.

சுகாதாரவாரம் வருடத்தில் ஒருமுறைகொண்டாடுவதுடன் முடிந்துவிடக்கூடாது. மக்கள் சுகாதாரத்துடன் வாழ மக்களுக்கு 'உபதேசம்' செய்வதுடனில்லாது சுகாதாரசேவைப் பகுதி உத்தியோகத்தர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். ஸ்தலஸ்தாபனசபைகளும் தங்கள் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து மக்கள்சுகாதாரத்துடன் வாழவழி செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் மக்களின் சுகாதரத்தைப் பேணுவதற்கான வசதிகள் குறைந்துள்ளன. சாக்கடை நாற்றமும் குறையவில்லை. மாநகர சபையின் நிர்வாகப் பொறுப்பை இப்பொழுது ஏற்றுள்ள விசேஷ கமிஷனர்களாவது விரைவில் நகரின் சுகாதாரத்தைக் கவனிக்க வேண்டும்.

## அழகுராணிப் போட்டிக்குத்தடை?

கொழும்பு, ஞாயிறு

அழகுராணிப் போட்டிகள் என்ற பெயரில் இளம் பெண்களை தவருன வழிகளில் செல்லக்கூடியமுறையில் தற்பொழுது நடாத்தப்பட்டுவரும் போட்டிகளை தடைசெய்வதற்கான சட்டங்கள் இயற்றப்படுவதற்கான அத்தியாவசியத்தைக் கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல பல பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாகத் தெரியவருகிறது.

தற்பொழுது அரை நிர்வாணமாகப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். பெண்களின் படங்களையும் பிரசுரிக்காமல் தடை செய்வதற்கு மந்திரி உத்தேசித்துள்ளார்.

அக்டோபரில்

## டில்லியில் உச்சி மகாநாடு

### டிட்டோ சம்மதம்

பெல்கிரேட், ஜூன் 5

அக்டோபர் மாதம் முதல் திகதி நாஸர்-டிட்டோ-இந்திரா உச்சி மகாநாடு நடைபெறுவதை யூகோ அதிபர் டிட்டோ ஆதரிக்கிருர். இது பற்றி அவர் இந்திய வெளிவிவகார ராஜாங்கமந்திரி தினேஷ்சிங்கிடம் அறிவித்திருக்கிருர்.

புதுடில்லியில் இம்மகாநாடு நடைபெறுவதில் தமக்கு ஆட்சேபனை இல்லாது என்றும் ஸ்ரீமதி இந்திரா, திரு. நாஸர் ஆகியோரின் வசதிப்படி இது நடக்க வேண்டும் என்றும் டிட்டோ கூறினர்.



## குடும்பக் கட்டுப்பாடு அவசியம்தானா?

உலகில் சனத்தொகை பெருகிவருகிறது. அதுவும் வளர்ச்சியடைந்த மேலை நாடுகளை விட வளர்ந்துவரும் ஆசிய-ஆபிரிக்க நாடுகளில் சனப்பெருக்கம் விசுவரூபம் எடுத்துள்ளது. இந்நாடுகள் தங்கள் அபிவிருத்தித் திட்டங்களை செவ்வனே செயல்படுத்தமுடியாமல் திண்டாடுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்காக பாடுபட்டுவரும் இந்நாடுகளில் பெருகிவரும் சனத்தொகை பெரும் பிரச்சினையாகவே இருந்துவருகிறது. இதனுல்தான் பல ஆசிய, ஆபிரிக்க நாடுகள் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்களை அமுல் நடத்திவருகின்றன.

### எமது நாட்டில்...

சின்னஞ்சிறு தீவாகிய நமது இலங்கையிலும் ஜனத்தொகைப்பெருக்கப்பிரச்சினை பயங்கரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அந்நியர் ஆட்சியில் பொருளாதார சுபீட்சத்தைப்பற்றியோ, அத்துறையில் வளர்ச்சியடைவதைப் பற்றியோ அக்கறை செலுத்தாமல் இருந்த நமக்கு சுதந்திரமடைந்த பின்னரும் நமது அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட வெளிநாடுகளையே நம்பியிருக்கவேண்டிய நிலை நீடித்துவருகிறது. வருடமொன்றுக்கு கோடிக்கணக்கில் வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது, இவ்வளவு தொகையான அரிசி இறக்குமதி செய்யப்படாவிட்டால் நமது நாட்டில் அரிசிப்பஞ்சம், உணவுப்பஞ்சமே ஏற்பட்டுவிடும். பெருந்தொகைப்பணத்தைச் செலவிட்டு அரிசியை இறக்குமதி செய்வதுடன் அரசாங்கம் கூப்பனுக்கு அதைக் குறைந்த விலையில் கொடுத்தும் பெரும் நஷ்டத்துக்குள்ளாகிறது. கூப்பன்அரிசி இல்லாவிட்டால் அடுப்பில் உலை வைக்கமுடியாத அளவுக்கு உள்ளவர்களும்நம்மிடையே இருக்கிருர்கள் என்பதையும் ஏன் மிகக் குறைந்த விலையில் கூப்பனுக்கு அரிசி வழங்கப்பட்ட பொழுதிலும் அதையே வாங்கமுடியாது திண்டாடுபவர்களும் நம்மிடையே இருக்கிருர்கள் என்பதை மறைக்கமுடியுமா? இந்த நிலையில் உள்நாட்டில் உற்பத்தியாகும் அரிசியைக்கொண்டு உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா என்ற கேள்வி எழவே இடமிருக்காது.

முக்கிய தேவைகளுள் ஒன்றுன உணவுத்தேவைக்கு மட்டுந்தானு 'நாம் வெளிநாடுகளை நம்பியிருக்கிறேம்? இல்லை. உடை, இருப்பிட வசதி உபகரணங்கள் உட்பட நம் தேவைகளில் பலவற்றுக்கு வெளிநாடுகளை முழுக்க முழுக்க நம்பியிராவிட்டாலும் பெரியளவில் வெளிநாட்டுப் பொருட்களை நம்பியிருக்கவேண்டியவர்களாகவே நாம் இருக்கிறேம். எங்கள் தேவைகளை நாங்களே பூர்த்திசெய்யக்கூடிய அளவுக்குஎப்பொழுது முன்னேறுவோம்.

ம. வ. கானமயில்நாதன்

### பொது நோக்கு

### அபிவிருத்தி திட்டங்கள் மட்டும் போதுமா?

விவசாய கைத்தொழில் துறைகளைஅபிவிருத்தி செய்வதில் இப்பொழுதுதான் நாம் அக்கறைகாட்டத்

(5-ம் பக்கம் பார்க்க)

## சுகாதார வாரம் ஏன் கொண்டாடுகிறேம்?

### சுகாதார அமைச்சரின் செய்தி

"நம் நாட்டை எதிர்நோக்கியுள்ள அதி முக்கியமானதும், அவசரமாகத் தீர்க்கப்படவேண்டியதுமான சுகாதாரப் பிரச்னைகளைப்பற்றி மக்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதையும் அவற்றைத் தீர்ப்பதில் தங்கள் ஒத்துழைப்பு எவ்வளவுக்குத் தேவை என்பதை மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதையும் முக்கிய நோக்கமாகக்கொண்டே ஜூன் மாதம் 5-ம் திகதி முதல் 11-ம் திகதிவரை இலங்கை பூராவும் மக்கள் கமிட்டிகள் மூலம் சுகாதாரவாரம் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்று சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன சுகாதாரவாரத்தையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இந்நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும், சுகாதார சுபீட்சத்துக்கும் சவால் விடுக்கும் பெரியதோர் பிரச்னையாக ஜனப்பெருக்கப் பிரச்னை ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்ப்பதுபற்றிய பிரசாரங்களே இம்முறை சுகாதாரவார விழாவில் முக்கிய இடம் பெறும்.

நமது நாட்டின் ஜனத்தொகை அதிகரிப்பு பெரும் பயங்கரமான நிலையில் உள்ளது. இது காரணமாக நமது தேசியப் பொருளாதாரத்தின் பெரும்பகுதி கல்வி, சுகாதாரம், சமூக சேவை ஆகியவற்றுக்காக செலவாகிவிடுகிறது. இதனுல் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை உரிய முறையில் செயல்படுத்த முடியவில்லை. ஜனப்பெருக்கத்தைக் குறைத்தால்தான்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

அழகு அழகான மணமிக்க மலர்களைத் தரும் அலரிமரங்களை (டெம்பிள் டிரீஸ்) அகற்றிவிடவேண்டுமென்று புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனர் உத்தரவு போட்டிருக்கிருராம். உலகிலிருந்தல்ல. இலங்கையிலுள்ள புதைபொருள் பகுதியின்பாதுகாப்பிலுள்ள இடங்களிலிருந்துதான்.

காரணம் என்ன தெரியுமா? அந்த மரங்கள் இலங்கைக்கு அந்நியமானவை என்றும், ஆகவே அவற்றை அகற்றி நாட்டு மரங்களை வைக்கவேண்டும். என்றும் கேட்டு அதற்காக விசேஷ செலவுசெய்யவும் அனுமதியளித்துள்ளாராம்.

டாக்டர் சார்ல்ஸ் கொடகும்பரா, இதுவரை யாரும் இல்லாதபடி, தேசியஉணர்ச்சியுடன் காரியங்களைச் செய்வது பாராட்டத்தக்கதே. புதிதாக அவர் எந்த மரங்களையும்வைக்கட்டும். ஆனுல் ஏற்கனவேயுள்ள அழகான மரங்களை எக்காரணம் கொண்டும் வெட்டச்செய்வது நல்லதல்ல.

அதிலும் கொழும்பிலே பிரதம மந்திரி வசிக்கும் இடத்துக்கு 'டெம்பிள் டிரீஸ்' (அலரிமாளிகை' என்று பெயரளித்துள்ளனர். அங்கு அழகான அலரி மரங்கள் ஏராளமாகவுள்ளன. அவற்றை எல்லாம் வெட்டி, வேறு மரங்களை வைத்து, அம்மாளிகையின் பெயரையும் இந்த அதிகாரி தேசியத்தின் பெயரால் மாற்றச்செய்வாரா?

அந்த அதிகாரியின் பெயரைப் பார்த்தேன். அதிலே 'சார்ல்ஸ்' என்ற சொல் உள்ளது. அது தேசியப் பெயரா? தேசியத்தின் பெயரால், மரங்களை வெட்டச் சொல்லும் அந்த அதிகாரி முடிவில் தமது பெயரைத் தேசியமயமாக்கிக் கொள்வாரா?

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்திலே முற்றவெளிக்குப் பக்கத்திலே நவீன வசதிகளுடன் கூடிய பெரிய பஸ்நிலையத்தை அமைக்கலாமென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. ஆனுல் முற்றவெளியும், பழைய டச்சுக்கோட்டையும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவின் மேற்பார்வையில் இருப்பதாயும், அந்த இடத்தில் பஸ்நிலையம் வைக்கக்கூடாதென்று அந்த இலாகா அதிகாரிகள் மறுத்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். இது உண்மையா?

யாழ்ப்பாணத்தின் சனத்தொகையும், வியாபாரமும் போக்குவரத்தும் வரவரப் பெருகிவருகிறது அதற்கேற்ப வசதியான பஸ்நிலையம் தேவை. யாழ்ப்பாணத்திலுள்ள டச்சுக்கோட்டை சரித்திர முக்கியமானதாக இருக்கலாம் ஆனுல் அக்கோட்டையையும், அதிலேயுள்ள பகிரங்க தூக்குமேடையையும் பார்க்கையில் நகருக்கே மட்டுமன்றி தமிழருக்கே அவமானமளிப்பதாகவுள்ளது. மூதேவி பிடித்ததுபோலுள்ள அந்தக் கோட்டை நகரின் மிக முக்கிய பாகத்தை ஆக்கிரமிக்கின்றது முதலில் அந்தத் தூக்குமேடையை நீக்கிவிடவேண்டுமென்றும், யாழ்ப்பாணத்தின் அழகையும், மதிப்பையும் அது கெடுக்கிறதென்றும் ஒரன்பர் மிகஉணர்ச்சியுடன் கூறுகின்ருர்.

ஆனுல் புராதன ஆராய்ச்சி அதிகாரி இதற்குச் சம்மதிப்பாரா? புராதன ஆராய்ச்சிகளைவிட, நகர

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## போதனமொழி வீட்டு மொழிதானு?

போதனுமொழிப் பிரச்சினை தற்போது பிரதம மந்திரி அவர்களது தீர்ப்பின் பிரகாரம் 'வீட்டிற் பேசப்படும் மொழி' போதனு மொழியாக இருக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்துள்ளதாக அறியக்கிடக்கிறது, இதையிட்டு தமிழரசுக்கட்சியினதும், தமிழ்க்காங்கிரஸ்கட்சியினதும் கொள்கையாது என்பதை அறிய மக்கள் ஆவலுடன் இருக்கிறுர்கள். போதனுமொழிப் பிரச்சினை தமிழ் மக்களையும், மொழியையும் கலாச்சாரத்தையும் பேணுகின்ற அடிப்படை உரிமைகளில் ஒன்றுன மிக முக்கியமானதோர் விடயமாகும்.

'வீட்டிற் பேசப்படும் மொழி' போதனு மொழியாக இருக்கவேண்டுமென்ற முடிவு சரியானதாக இருக்க முடியாது. ஏனெனில் தமிழ் பேசுமினத்தில் (வடகீழ் மாகாணந் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வாழும்) கணிசமான தொகைனர் சிங்கள மொழியை வீட்டு மொழியாகக் கொண்டுள்ளனர். பிரதமரது தீர்ப்பின்படி இவர்களுக்கு சிங்கள மொழியே போதனு மொழி என்று கட்டுப்படுத்தப்படுகிறது. இக்கட்டாயநிலை தமிழ்பேசுமினத்தை வெகுவாகப் பாதிக்குமெனக்கருதுகிறேம். இக்கருத்தைப் பரிசிலனைசெய்து சரியான முடிவுக்கு தமிழ்ப்பேசும் தலைவர்கள் வரவேண்டும்.

இப்பிரச்சினையை உரிய முறையில் அணுகி தாய்மொழியே போதனு மொழியென இலங்கை பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டும். தாய்மொழி தலைமுறை தலைமுறையாக வழங்கப்பட்டு வரும் மொழியாக இருக்கும். அதாவது தமிழ்பிள்ளைகளுக்கு தமிழ்மொழியே போதனு மொழியாக இருக்கவேண்டும். இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வைக்கவேண்டிய பொறுப்பும், கடமையும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினருக்கேஉரியதாகும்.

ம. ஆ தம்பிநாயகம்

உருத்திரபுரம்,

ஃ ஃ ஃ

## "இந்து பல்கலைக்கழகம்"

2-6-66-ல் வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில் மத்தியகல்லூரியில் 1-6-66ல் நடந்த ஆலோசனைக் கூட்டத்தைப்பற்றிய செய்தியில் 'இந்துபல்கலைக்கழகம்' நிறுவவேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது என்ற தலைப்பில் சர்வசமய காங்கிரஸ் செயலாளர் திரு. எஸ். ஸ்ரீநிவாசன் பேசினர் என்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைக் கூட்டத்தில் யாள் சர்வசமய காங்கிரஸ் சார்பில் கலந்துகொள்ளவில்லை. மொழியையோ சமயத்தையோ முன்வைத்த சர்வகலாசாலையை நான் ஆதரிக்கவில்லை. பின்னையது தமிழினத்தைப் பிளவுபடுத்தும். ஓர் சர்வகலாசாலை யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவேண்டும். அதில் இந்து கலாச்சாரப் பகுதியும் அமையவேண்டும். இதுவே சகல வேறுபட்ட கருத்துடையவர்கட்கும் ஏற்புடைத்தாகும். அரசியல் கட்சிகள் இவ்விஷயத்தில் முன்னிற்பது ஆபத்தானது.

ச. ஸ்ரீநிவாசன்,

உடுவில்.

## புதிய அரசாங்க ஊழியர் நிலை

தமிழ் அரசாங்க ஊழியர் எவரும் சிங்களம் கற்கக்கூடாது என்று இலங்கைத் தமிழரசுக்கட்சி பணித்தது. எழுதுவினைஞர் சங்கமும் சிங்களம் கற்பவர்களைக் குஷ்டரோகிகள் என்று கிண்டல் செய்தது. புதிய ஊழியர் எல்லோரும் ஒற்றுமையுடன் சிங்களம் கற்காது இப்பாரபட்சமான மொழிக் கொள்கையைத் தீவிரமாக எதிர்க்க வேண்டுமென்று கடந்த ஐந்தாண்டுகளாக முழங்கியது. பலர் படித்தனர். சிலர் படிக்காதுஎதிர்த்தனர்.

எழுதுவினைஞர் சங்கம் கோடீஸ்வரன் வழக்கில் வெற்றியீட்டியதால் பழைய ஊழியருக்கு நம்பிக்கை பிறந்தது இந்த நிலையில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பெற்றது. அரசாங்க ஊழியருக்கும் நம்பிக்கை பிறந்தது. புதிய ஊழியரைப் பலி கொடுத்து, நாநூறுக்கும் உட்பட்ட பழைய ஊழியரின் படி உயர்வைப்பெற்றுக்கொடுத்தனர்.

தனிப்பட்ட முறையில் தமிழ் அரசாங்க ஊழியர்களைச் சிங்களம் கற்க வேண்டாமென்று கடித மூலம் வேண்டியவர்கள்கூட இன்று புதிய ஊழியர்பற்றி மௌனம் சாதிக்கின்றுர்கள். பத்திரிகைகள் மூலமாவது இன்றுள்ள நிலையை அரசாங்க ஊழியருக்கு அறியத்தர வேண்டும்.

எழுதுவினைஞர் சங்கம் இரண்டாவது வழக்கு கைவிடப்பட்டது. தொழிற்சங்க நடவடிக்கை ஏதும் எடுக்கக்கூடிய சக்தி இல்லை. இருந்தும் மந்திரி சபை முடிவை ஏற்பதில்லை என முடிவு செய்தது. படிக்க விரும்பாதவர்கள் இவைப் பாறக்கூட வசதி செய்து கொடுக்காது, இழந்த உரிமைகளைக்கூடப் பெற்றுக் கொடுக்காது இன்று ஒன்பது ஆண்டுகள் வாடிவதங்கிய புதிய ஊழியரைப் படியுங்கள் என்று கூறுவது நீதியல்ல.

புதிய ஊழியர் இதுவரை இழந்த படி உயர்வு பதவிஉயர்வு போன்ற உரிமைகளையும் பத்தாண்டு முடிந்ததும் இளைப்பாறும் உரிமையையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். செய்வார்களா?

கயிலாசன் பத்மநாதன்,

கொழும்பு.

## சுகாதரா . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தித் திட்டங்களை உரிய முறையில் செயல்படுத்தலாம். அடிக்கடி பிள்ளைகளைப் பிரசவிப்பதால் தாய்மார்களும் பலவீனமடைவதுடன் குழந்தைகளும் திடகாத்திரமாய் இருப்பதில்லை. இதனுல் நாம் பலவீன சமுதாயத்தை உற்பத்தி செய்தவர்களாகிறேம். இதைத் தவிர்க்க திட்டமிட்ட குடும்பக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாகிறது.

நாட்டு மக்களின் ஒத்துழைப்புடன் நமது சுகாதாரப் பிரச்சினைகளை தீர்க்கமுடியும் என நாம் நம்புகிறேம். நல்லாரோக்கியமும், சுபீட்சமும் உள்ள தேசத்தை உருவாக்குவது நம் எல்லோரது கடமையுமாகும். இதை நிறைவேற்றுவதில் நாட்டு மக்கள் எல்லோரது ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

## குடும்பக் கட்டுப்பாடு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கியுள்ளோம். அதிலும் அரசாங்கம் இதற்கான பல திட்டங்களை தீட்டிவருவது உண்மையாயினும் பொதுமக்களாகிய எங்கள் ஒத்துழைப்பு மிகமிக அவசியம். நாடு வளர்ந்தால் தான் நாம் வாழலாம் என்ற எண்ணம் பொதுமக்கள் ஒவ்வொருவர் மனதிலும் —குறிப்பாக இளைஞர்கள் மனதில் எழவேண்டும். நாற்காலி உத்தியோகங்களை நம்பியிருந்து காலத்தை வீணுக்குவதில் அர்த்தமில்லை; அதனுல் நமக்கும் நாட்டுக்கும் பெருந்தீங்கு செய்தவர்களாகிறேமேதவிர எதுவித பயனுமில்லை. ஒவ்வொருவர் ஆற்றலுக்கும், திறமைக்கும் ஏற்பத் தொழில்துறைகளில் மாணவர்கள் ஈடுபடக்கூடியதான கல்வி முறையும் நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களை செயல்படுத்த மிக முக்கியமானவை. தொழில்முறைக் கல்வி ஏற்பட்டால்தான் அபிவிருத்தித் திட்டங்களை செவ்வனே நிறைவேற்றி நாட்டை வளம்படுத்த முடியும்.

### பிவிருத்தித்திட்டங்களும் சனப்பெருக்கமும்

நாட்டின் பொருளாதார சுபீட்சத்துக்கான அபிவிருத்தித்திட்டங்களை செயல்படுத்துவதில் தயக்கம் காட்டும் நமது நாட்டு மக்கள் சனப்பெருக்க அபிவிருத்தியில் பின்நிற்கவில்லை என்ற கசப்பான உண்மையை நாம் எல்லோரும்ஏற்றுக்கொள்ள வேண்டியது தான்.

சனத்தொகைப் பெருக்கம் ஏறிக்கொண்டிருக்கும் அதே வேளையில் இறப்பு விகிதம் குறைந்துள்ளது. முன்னர் மலேரியா போன்ற நோய்கள் பலருக்கு மரணத்தை ஏற்படுத்தின. ஆனுல் புதிய மருந்துகள் மூலமும் நவீன வைத்திய முறைகளாலும் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சனத்தொகைப் பெருக்கத்தை குறைக்கவேண்டியது மிகவும் அவசியமாகின்றது. ஒரு நாட்டின் செல்வம் அங்குவாழும் மக்களின் தேகாரோக்கியத்தைப் பொறுத்ததே. மக்கள் திடகாத்திரமும், வலிமையும் உள்ளவர்களாக இருந்தால்தான் அபிவிருத்தித்திட்டங்களை செயல்படுத்தலாம். ஒரு தாய் அதிக பிள்ளைகளை குறுகிய காலத்தில் பிரசவிப்பதால் தாய்மார்கள் உடல்நிலை கெடுவதுடன் பிள்ளைகளும் 'நோஞ்சான்'களாகவே இருப்பர். இதனுல் பலவீனமான சமுதாயத்தையே உற்பத்தி செய்வதாகும்.

### குடும்பக்கட்டுப்பாடு அவசியமா?

தனி மனிதன் நல்லாரோக்கியத்துடன் இருந்தால்தான் திடகாத்திரமான சமுதாயம்உருவாகும், திடகாத்திரமான சமுதாயம் உள்ளநாட்டில் தான் அபிவிருத்தித் திட்டங்களை செவ்வனே செயல்படுத்தலாம். அபிவிருத்தித்திட்டங்களைச் செயலாற்றினுல் தான் நாடு பொருளாதாரத்துறையில் வளர்ச்சியடையலாம். நாடு வளம் பெற்று செழிப்புற்றுல் தான் தனி மனிதன் வாழ்வும் நலமடையும், எனவே திட்டமிட்டகுடும்பக்கட்டுப்பாட்டுக்கு பொது மக்கள் தங்கள் ஆதரவை நல்கவேண்டியது அவர்கள் கடமையாகிறது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# திருக்குறள் இலக்கணம்; சிலப்பதிகாரம் இலக்கியம்

## வள்ளுவர் விழாவில் பேச்சு

உடுப்பிட்டி, ஞாயிறு

''தமிழன் பெருமையை உலகில் விளங்கச்செய்த திருவள்ளுவர்எமக்கு வழிகாட்டியாக மட்டுமல்ல, உலகத் தமிழர்களின் மாபெரும் தலைவராகவும் விளங்குகின்றுர். சிலப்பதிகாரத்தில் இளங்கோ கண்ணகியின்கற்பின் பெருமையைக்கூறுமுன்னரே வள்ளுவர் தனது குறளில் கற்பின் சிறப்பைப் பாடியுள்ளார். திருக்குறளின் கருத்தை மையமாகக் கொண்டே இளங்கோ சிலப்பதிகாரத்தைப் படைத்தார் இது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும் இளங்கோ வடிகள் சிலப்பதிகாரத்தை எழுதுவதற்குரிய காரணத்தைச் சொல்லும்போது அறம், தர்மம், வீரம் வழுவாது அரசுபுரியும் மன்னன் ஏதாவது ஒன்றிலிருந்து மாறுபடுவானுகில் மன்னவனின் முடிசாயும் என்ற குறளின் கருத்தை ஆதாரமாகக் கொண்டே சிலப்பதிகாரம் புனைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.''

கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக்கழக 10-வது ஆண்டு வள்ளுவர் நினைவு தின முதல்நாள் விழாவில் திரு. வ: பொன்னம்பலம் ''குறளும் சிலம்பும்'' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர் வித்துவான் க. க. கார்த்திகேசு விழாவுக்குத்தலைமைவகித்தார். திரு. ந. சிவஞானம்வரவேற்புரை கூறினுர்.

திரு. வ. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது;—

ஒரு நாட்டின் மன்னன் அறவழிதப்பி மறவழியில் செல்லும்போதே காப்பியம் அமைகின்றது, எனது ஆராய்ச்சிகளைப் பொறுத்தவரையில் திருக்குறள் இலக்கணமாகவும் சிலப்பதிகாரம் இலக்கியமாகவும் உள்ளதென்பது முடிவானதாகும். சிலம்பிலே பூம்புகார் போற்றப்படுகின்றது. ஆனுல்கண்ணகிக்குச் சிலையெடுத்த வழிபட்டபெருமை இலங்கைக்கும் உரியதாகும். கற்பைப் போற்றும்நாம் கற்பிற்கு வரைவிலக்கணம் வகுத்த வள்ளுவனுக்கு ஊர்கள் தோறும் விழா வெடுக்க வேண்டும்,''

வித்துவான் க கார்த்திகேசு தமதுதலைமையுரையில் ''வள்ளுவனின் ஈரடிக்குறள்கள் உலகையே கவரும் வலிமையுள்ளது, எம்நாட்டுப் புலவனின் பெருமையை நாம் உணராத சமயத்தில் பிறநாட்டினர் போற்றிப் புகழ்ந்து கொண்டாடுகின்றனர். இத்தகைய பெருமையைப் பெற்றவர்வள்ளுவர்'' என்று கூறினுர்.

திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம் பேசுகையில், ',வள்ளுவரை இந்துசமயத்தவர் மட்டுமல்ல, பல்வேறு மதத்தவர்கள், பிறநாட்டவர் ஆகியோரும்கொண்டாடுகிறுர்கள். பல மதத்தவர்கட்கும் பொதுவான கருத்துக்களைக் கூறும் வள்ளுவர் இறைவன்ஒருவன் இருக்கின்றுன் என்று வலியுறுத்துகின்றுர்'என்று கூறினுர்.

வித்துவான் க, வேந்தனுர் பேசுகையில் கூறியதாவது: ''குறள் தமிழிலே எழுதப்பட்டிருந்தாலும் தமிழருக்கு மட்டும் உரிமையானதல்ல வென்று வள்ளுவர் தமது குறள்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றுர். தமிழ்நூல் ஒன்று உலகப்பொதுநூலாக விளங்குகிறதெனின் அது 'திருக்குறளே', பாரதி தமிழிலே உலகம் போற்றும் நூல்கள் உண்டாக வேண்டும் என்று மனம் வெதும்பினுர். இன்று அவர் கனவு நனவாகிவருகிறது. குறள் பத்தொன்பது மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வள்ளுவர் எப்பொழுதும் உயர்வானவற்றை நினைத்து வந்துள்ளார். ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற அடியின்மூலம் வள்ளுவர் தனது உள்ளக் கருத்தைத் தெளிவுபடுத்துகிறுர்.''

செல்வி சாரதா சோமசுந்தரம் சங்கீத கதாகாலாட்சேபம் செய்தார். வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி மாணவர்களின் ''குறள் வழி'' என்னும் நாடகமும் நடைபெற்றது.

## ஐயாறன்

(4 ம்பக்கத்தொடர்ச்சி)

மக்களின் வளரும் தேவைகளைப் பூர்த்திசெய்வதே அதிக முக்கியமாகும். அதிலும் தங்களுக்கு அவமானமளிக்கும் பழைய சின்னங்களை ஒழித்துக்கட்டுவதே ஒரு சுதந்திரநாட்டின் முதல் வேலையாக இருக்கவேண்டுமல்லவா?

ஃ ஃ ஃ

இந்தக் கோட்டைக்காரர்கள், யாழ்ப்பாணத்திலிருந்த பல கோயில்களை இடித்து அவற்றைக் கொண்டு கட்டியதாகக் கூறுவர். அங்குள்ள சிறைச்சாலையை வேறு எங்காவது மாற்றிவிட்டு, அக்கோட்டைப்பகுதியையும், முற்றவெளியையும் மக்களின் மேலான தேவைக்குப் பயன்படுத்தவேண்டும். அதனுல் நகரும் அழகாகும். தலைமை அரசாங்கத்துக்கு இதைத் தக்கபடி நமது எம். பி மார்கள் எடுத்து விளக்கி, இப்பெரிய சீர்திருத்தத்தைச் செய்விப்பது மிக மேலான நல்ல பணியாகும் செய்வார்களா?

ஃ ஃ ஃ

யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகத்தை நடத்த நியமிக்கப்பட்டுள்ள மூன்று கமிஷனர்களது ஆட்சி இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குக்கூட நீடிக்கலாமென்றும், அதற்கிடையில் விசேஷ சீர்திருத்தங்கள் செய்யப்படக்கூடும் என்றும் கேள்விப்பட்டேன்.

ஃ ஃ ஃ

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே,
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே
அரன்நாமம் கேளாய்
நங்கிளை கிளைக்
குங்கேடு படாத்திறம்
அருளிக், கோளாய
நீங்குமவன் கோளிலியெம்
பெருமானே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்

## ஜனநாயகத்துக்கு . . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

றும் சபைகள் கலைக்கப்படவில்லை. எனது நிர்வாகத்தில் பிழையில்லாததினுலேயே திடீர் கலைப்பு நடைபெற்றது.

கரைச்சி கிராமசபைத் தலைவர் திரு வி. ஆனந்தசங்கரி பேசும்போது கூறியதாவது: ''தமிழ்மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்காகத் தேசிய அரசாங்கத்துடன் இணைந்தோமென்று கூறும் ஸ்தலஸ்தாபன மந்திரி தமிழ்மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் ஈடுபட்டுவருகிறுர். உள்ளூராட்சி மன்றங்களின் உரிமைகளை வழங்கப்போகிறேனென்றும், எல்லாச் சபைகளையும் வேறுபாடின்றிக் கவனிப்பேனென்றும் ஆரம்பத்தில் கூறிய ஸ்தலஸ்தாபன மந்திரி, தற்பொழுது எதிராக நடவடிக்கை எடுத்துவருகிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொர்ணலிங்க வர்ணனைகள்

'கலையரசு' சொர்ணலிங்கம் அவர்களுடன் கதை அளந்து கொண்டிருந்தால் (அளப்பவர் அவர், கேட்பது நாம்) நேரம் போவது தெரியாது. 77 வருடங்களாக இந்த உலகத்தையும் அதில் வாழும் மனிதர்களையும் அவர்களுடைய நடத்தைகளையும் கூர்ந்து கவனித்து ஒவ்வொரு சிறு சிறு சம்பவத்தையும், தேன்கூட்டில் தேனீக்கள் தேன் சேகரித்து வைப்பது போல், தமது மூளைக்குள் பொதிந்துவைத்திருக்கிருர் சொர்ணர். யாராவது கதை கொடுத்து விட்டால் போதும்! அவை ஒன்றன் பின் ஒன்ருக புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டாற் போல வெளிவரும்,

அவருடைய முதலாவது ஆசை நடிப்பது, இரண்டாவதுஆசை கதைப்பது. கதை சொல்லும் போது வெறும் வார்த்தைகள் மட்டும் வராது. பொருத்தமான சைகைகள், சமிக்ஞைகள், அபிநயங்கள், முகபாவங்களுடன் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நாடகமாகவே காட்சி தரும். தள்ளாதவயதில் அங்கங்களில் சுளுக்கு முறிவு ஏதாவது வந்துவிடுமேஎன்று கொஞ்சமேனும் பயப்படாமல் கதை சொல்லிக்கொண்டு போகும்போது 'டபார்' என்று ஒரு வில்லங்கமான 'போஸ்' பிடித்து காண்பித்து விடுவார்.



பற்கள் பல தமக்கு துரோகம்புரிந்துவிட்டு வெளியேறி விட்டனவே என்று சொர்ணர் ஐயாவிற்குப் பெரிய கவலை. அத்துடன் வயோதிபமும் சேர்ந்து சரியான உச்சரிப்புடன் பேசும் வல்லமை குன்றிப்போகிறதை நினைக்க அவருக்கு பெரும் ஆத்திரம். எங்கேயாவது பேசவேண்டுமானுல் வாய்க்குள் எளிதாக புகக்கூடிய சொற்களையே பாடுபட்டுத்தெரிவு செய்வாராம், முன்னேற்பாடில்லாமல் திடீரென்று யாராவது பேசும்படி கேட்டுவிட்டால் வந்தது ஆபத்து! கதைப்பதில் இந்த மனிதருக்கு அப்படிப்பட்ட பெரும் ஆவல்!

இப்படி ஒருநாள் நாலைந்து பேர் சொர்ணர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த சமயம் ஓர் அன்பர் கேட்டார்:

"ஐயா, இந்த உலகத்திலே சேவற்கோழி தான் பேட்டுக்கோழியைவிட அழகாயிருக்கிறது; பெண் மயிலைவிட ஆண்மயில் தான் தோகைவிரித்தாடி மிகவும் அழகாயிருக்கிறது; ஆண் சிங்கம் பெண்சிங்கத்தைவிட அழகாயிருக்கிறது. இப்படியே பறவைகள், விலங்கினங்கள் எல்லாவற்றிலும் ஆண்வர்க்கமே அழகில் பெரிதாயிருக்க மானிடரில் மட்டும் ஆண்களைவிடப் பெண்களே அழகுடன் விளங்குவது ஏன்?''

சொர்ணர் ஐயா கன நேரம் யோசிக்கவில்லை. இடித்த வெற்றிலை பாக்குத் தூளை மென்று குதப்பிக்கொண்டிருந்த வாய் இரண்டு மூன்று தரம் மிக வேகமாக மென்றது. கண்களில் ஒரு குறும்புப்பார்வை ஒளி வீசியது.

அவர் சொன்ஞர்: ''ஒய் தம்பி! ஆணையும் பெண்ணையும் படைத்த கடவுள் ஆணுக்குத்தான் ஒரு கூடுதலான வசீகரிக்கும் அம்சத்தைக் கொடுத்திருக்கிருர். பெண்களை நாங்கள் தான் அழகுபடுத்துகிரேும். அவர்களுக்குப் பளபளப்பான உடுபுடவைகளையும், காது மூக்குக்கு ஜொலிக்கின்ற ஆபரணங்களையும், மேனி மினுக்கும் பூச்சுக்களையும், பொட்டுக்களையும் வாங்கிக் கொடுக்கிரேும், சில ஆண்களுக்குப் பெண்வேஷம் போட்டால் அவர்கள் அசல் பெண்களைப் போலவே வசீகரமாயிருப்பதை நீர் காணவில்லையோ? ஜோடனைகள் எதுவுமில்லாமல் பார்த்தால் ஆண்களுக்குத் தான் பெண்களைவிட அழகை ஊட்டும் ஒரு முக்கியமான அம்சம் இருக்கிறது!''

''அதென்ன ஐயா?''

''மீசை'' என்ருர் சொர்ணர், தமது அரைத் தும்புக் கட்டு மீசையை அன்புடன் வருடியபடி.

(மேலும் வரும்)

# வசனநடை பாடுகிறது

தாய்மொழியிற் பாடுவதே கேட்போரை உளங்குளிர்வித்துணர்வினிக்க இன்பூட்டி உவப்பிக்கும். பொருளறியாப்பிறமொழிப் பாட்டெதுவும் காதிலின்னேசையளவில் நின்று, நெஞ்சநெகிழ்த்துணர்வெழுப்புஞ் சுவையினிலே குன்றிவிடும். அதனுற்றன் உணர்வு நிறைந்துளங் குளிர்ந்தோர் பரவசத்தால் தாய்மொழியில் பாடுகின்ருர். பண்ணறிவில்லாதவரும் உணர்வூறி வழியுங்கால் நினையாமல் வாய்பாட மனமகிழுமியல்பினையும் காணுகிரேும். பெரும் பரதகண்டத்தில் பலமொழியாரவரவர் தம் தாய்மொழியிற் பாடுவதிற்றடை காணுதவர்கள் தமிழ்ப்பாட்டை எதிர்ப்பதற்குத் தாமறியுங்காரணங்களிருத்தல் வேண்டும்.

தமதாக்கம் கருதித் தம்முரிமை தாமடையத் தமிழ்மக்கள், தம் நாட்டில் தமிழினும் தமிழர் பழங்கலைகளிலும் தடுப்பரிய காதலொடு மறுமலர்ச்சி யுணர்ச்சியெழத் தமதுடைமை மீட்பதற்கு முயல்கின்ருர். உறங்கியவர் விழித்துப் புத்துணர்வுற் றாக்கும் ஆக்கமுயற்சிகளை வரையறுத்து அரசியலில் தமக்குதவும் அம்மட்டோ டமைந்தோய ஆனவர்கள் ஆணையிட்டுவருகின்ருர். மீறுவோரை சபித்திழித்து வைகின்ருர். அரசியலில் ஆங்கிலரை எதிர்த்துத் தமமுரிமை மீட்பினிலே முனைபவரைப் பிறதுறையிலவர்களுக் கடங்கியவராணைவழி நிற்பரென நினைப்பார் தம்பேதமையை என்னெனன்பாம். எதுகொண்டும் யாரிடத்தும் இகலுவதை வெறுத்து நடுநிலையே விரும்புஞ் செட்டிநாட்டரசர், ஓரிசைக் கூட்டத்தில் தமிழரிடைத் தமிழ்ப்பாட்டு மிகுவிற்கும் நன்னேக்கமொன்றே கூறித் தூண்டிஞர்கள். உடனே இங்கொருவகுப்பார் உடன்றெழுந்து மணியிழந்த நாகம்போல் மாழ்கிச்சீறி அழலுகிருர். பண்பாதி—பா பாதி என்ற பழம் படிப்பினையு மறந்துவிட்டார்.

—சோமசுந்தரபாரதியார்

# பஞ்சாமிர்தம்

தயாரிப்பு:- வி. என். பி.

## வித்திலே வித்தை

நியூயோர்க் நகரிலே மிகவும் பிரபலமான முடிச்சுமாறி ஒருவனும் சிகாகோ நகரத்தில் அவனுக்கு சற்றேனும் இளைக்காத 'பிக்பொக்கட்' பெண் ஒருத்தியும் ஒரு நாள் ரயில் பிரயாணத்தின் போது சந்திக்க நேர்ந்தது. இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்து அறிந்து கொண்டபின் முடிச்சுமாறும் வித்தையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று வாழ்ந்து வரும் தங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால் அவன் எப்பேர்ப்பட்ட 'வீண்ணுதி விண்ணனுய்' விளங்குவான் என்று இருவரும் ஆசைகொண்டு திருமணம் செய்ய முடிவுசெய்தார்கள்.

காலாகாலத்தில் அவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. ஆனந்த மேலீட்டினுல் அவர்கள் இருவம் அதை பொற்பதுமையெனப் பாதுகாத்து வளர்த்துவந்தார்கள். ஆனுல் அவர்களுக்கு ஒரு சிறிய குறை.

அந்தக் குழந்தை பிறக்கும் பொழுதே அதன் வலது கைவிரல்கள் ஐந்தையும் இறுக்கிப் பொத்திய வண்ணமே பிறந்துவிட்டது. அந்த அங்கக் குறைவை நிவர்த்தி செய்வதற்குப் பெரும் பணக்காரர்களான தாய் தந்தையர் காணுத டாக்டர் இல்லை. போகாத ஆஸ்பத்திரி இல்லை. பொத்திய கை பொத்திய படியே இருந்தது.

கடைசியில் அவர்கள் வியன்ன நகரத்திலுள்ள ஒரு பெரிய மனதத்துவ நிபுணரான டாக்டரிம் தங்கள் அருமைப் பாலனை எடுத்துச் சென்றனர். அந்த நிபுணர் குழந்தையை நன்ருகப் பரிசோதித்து விட்டு அதன் தேகத்தில் ஒருவிதமான கோளாறும் இல்லை என்பதை நிரூபித்தபின் தாய் தந்தையரின் வாழ்க்கை வரலாற்றை ஒன்றும் ஒளியாமல் கூறும்படி கேட்டார். அவர்களும் அவ்வண்ணமே ஒன்றும் விடாமல் சொன்ஞர்கள்.

இதைக் கேட்டதும் டாக்டர் கன நேரம் யோசித்துவிட்டு குழந்தையை அடுத்த நாள் கொண்டு வரும்படி பணித்தார்.

அடுத்த நாள் டாக்டர் தமது அறையில் குழந்தையை ஒரு கட்டிலில் படுக்க வைத்துவிட்டு அதன் முகத்துக்கு மேலே வைரங்களும் மாணிக்கங்களும் பதித்த ஒரு விலையுயர்ந்த தங்கப் பதக்கத்தை அங்கும் இங்குமாக கடிகாரத்தின் 'பென்டுலம்' போல ஊசலாட்டினர். குழந்தையின் கண்கள் அந்தப் பதக்கத்தை இமை வெட்டாமல் நோக்கியவண்ணம் அதோடு ஊசலாடிக்கொண்டிருந்தன.

சிறிது நேரம் செல்ல அதன் வலதுகை மெதுவாக பதக்கத்தை நோக்கி எழுந்தது. டாக்டர் அதை ஆட்டிக் கொண்டிருந்தார். பொத்திப் பிடித்தவிரல்கள் மெல்லமெல்ல ஒவ்வொன்ருக விரிந்தன.

அந்தச் சிறிய கைக்குள் என்ன இருந்ததுதெரியுமா?

தாய் பிரசவித்தபோது உதவி செய்த மருத்துவப் பெண்ணின் மோதிரம்!

## வெண்ணிலாவே!

சந்திரன் பூமியிலிருந்து 2,38,000 மைல் தூரத்திலுள்ளது. ஒரு மணிக்கு 200 மைல் வேகத்தில் செல்லும் வானவூர்தி ஏறக்குறைய ஏழு வாரத்தில் சந்திரனைப் போய்ச் சேரலாம். சந்திரனது தூரத்தின் 400 மடங்கு தூரத்தில் சூரியன் இருக்கிறது, சந்திரனின் குறுக்களவு 2,163மைல் ஆகும். சந்திரனது மேற்பரப்பு பூமியின் மேற்பரப்பில்14. இல் ஒரு பங்கு உள்ளது. ஆனுல், வியாழனின் மேற்பரப்பு அதன் பெரிய மதியினதைப் பார்க்கிலும் 700 மடங்கு பெரியது. சந்திரனது கவர்சக்தி பூமியின் கவர்சக்தியின் 6 இல் ஒரு பங்குதான் பலமுடையது. பூமியில் 90 ருத்தல் நிறையுள்ள ஒரு பையன் சந்திரனில் 15 ருத்தல் தான் கனமுடையவனுக இருப்பான். சந்திரன் மணிக்கு 2,300 மைல் வேகத்தில் செல்லுகிருன். சந்திரன் பூமியைச் சுற்றுவதற்கு சுமார் 27 1/3 நாள் செல்லும். பூமியைச் சுற்றிவரும் நேரத்தில் வானிலுள்ள இராசி மண்டலத்திற்கு இப்பால் 360 வரையுள்ள (360°) ஒரு வட்டடதை முற்றிலும் சுற்றுவதாக சந்திரன் தோன்றும். சந்திரன்பூமியைச் சுற்றிவரும் வழியும் முழுவட்டமன்று. ஆதலால் ஒருநேரத்தில் பூமிக்குப் பக்கமாகவும் மற்ருெரு நேரத்தில்பூமிக்குத் தூரமாகவும் அது செல்லும். சந்திரன் பூமியைச் சுற்றும்போது மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றுவ[illegible] கொருமுறை ஒருவாறு சுற்றிவரும். நட்சத்திர வட்டத்தில் சந்திரன் 27 1/3 நாளுக்குள் ஒருமுறை சுற்றிவந்தாலும் அது பூமியோடு செல்வதற்குமேற்கொண்டு 2 1/4 நாளாகும். சூரியன், பூமி என்பவற்றோடு ஒரேநேர்க்கோட்டில் சந்திரன் வருவதற்கு சுமார் 29 1/2 நாளாகும்.

## இரட்டைகதவு திறந்து வியாபாரம்

யாழ்ப்பாணம், சனி

நேற்று முன்தினம்வரை ஒற்றைக் கதவை திறந்து வியாபாரம் செய்தவர்கள் நேற்று இரட்டைக் கதவை திறந்து வியாபாரம் செய்த காட்சியை யாழ்ப்பாணத்தில் காணமுடிந்தது.

ஒற்றைக் கதவைத் திறந்து வியாபாரம் செய்யக்கூடாது என யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வாத்தக சங்கத் தீர்மானத்தை தொடர்ந்து மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம் என துணிவாங்க வந்த ஒருவர் பகிடியாகச் சொன்ஞர்.

நடை பாதையிலும், அங்காடி வியாபாரிகள் பட்டு சேலைகளை நேற்றுக் காலை விற்றனர். ஒரு சேலை 18 ரூபா விதம் விற்பனை செய்தனர். இச்சேலைகள் பழுதடைந்தவையென்றும்,குறைவான விலைகளுக்கு கடைகளில் வாங்கி, சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கூடிய விலைக்கு விற்கிருர்களென்றும், இச்சேலைகள் சீக்கிரம் பழுதடைந்து விடும் என்றும் கடைக்காரர் ஒருவர் தெரிவித்தார்.

## இதிலுமா அஹிம்சை

சேவா கிராமத்தில் நான் ஒரு வாரம் மகாத்மா காந்தியுடன் தங்கியிருந்தேன். இந்திய கண்டத்தின் மத்தியில் அமைந்துள்ள ஒரு சிறு கிராமம்இது. கடைசி மூன்று நாட்களும்,நேருவும் அங்கே இருந்தார்.

வைக்கோலால் வேயப்பட்ட தரையில்லாத ஒரு மண் குடிசை தான் எனது வாசஸ்தலம். கயிற்றுப்பின்னலைத் தாங்கிய நான்கு மரக்குத்திகள் தான் எனது கட்டில். வானத்தில் மின்னும் நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டே தூங்கினேன். காந்தியின் உணவையே நானும் உண்பேன்.

அவித்த காய் கறியும், துவைத்த கீரையும், உருளைக்கிழங்கும், பச்சைவெங்காயமும், பசுப்பாலும், மாம்பழமும், தேன், தேநீர், பிஸ்கோத்தும் தான் சமையல். ஒவ்வொருநாளும் இதே சாப்பாடு தான்.


மத்தியானம் அவித்த மரக்கறியும், துவைத்த கீரையும். இரவுக்கு துவைத்த மரக்கறியும் அவித்த கீரையும்!

இரண்டு நாட்கள் ஒருவாறு சமாளித்துவிட்டேன். மூன்ரும் நாள் 'தாங்க்யூ' வேண்டாம் என்றேன்.

நான் சாப்பிடும்பொழுது காந்தி என்னை அடிக்கடி கவனித்துக்கொள்வார் உணவு காரியங்களில் அவருக்கு மிகுந்த அக்கறை.

'மரக்கறி பிடிக்கவில்லையோ?' என்று கேட்டார்.

'இந்த மரக்கறிகளின் ருசி எனக்குப் பிடிக்கவில்லை' என்றேன்.



'உப்பும் எலுமிச்சம் புளியும் நிறைய சேர்த்துக் கொள்ளவேண்டும்' என்ற யோசனை கூறிஞர்.

'அதாவது 'மரக்கறியின் ருசியை கொல்லச் சொல்லுகிறீர்கள்' என்று சிரித்தேன்.

'இல்லை, இல்லை. ருசியை இன்னும் அதிகரிப்பதற்காக!

'ருசியைத்தானும்கொல்ல மாட்டீர்கள்! இதிலுமா அஹிம்சை?'

- லூயி பீஷர்

அடுத்த பஞ்சாமிர்தம் 14—6—66 செவ்வாய்க் ழமை வெளிவரும்.

## ஜெனரலுக்கு பிரிவுபசாரம்

புதுடில்லி, ஜூன் 5

பதவியிலிருந்து ஓய்வு பெறும் இந்திய ராணுவ தளபதி ஜெனரல் சௌத்ரிக்கு நேற்று ராணுவ அதிகாரிகள் பிரிவுபசாரம் ஒன்றை நடத்திஞர்கள்.

அப்போது சௌத்ரி பேசியபோது ராணுவம் இப்போது நல்ல நிலையில் இருப்பதாயும், புதிய தளபதி ஜெனரல் குமாரமங்கலத்தின் தலைமையில் அது வெற்றிகரமாக இயங்குமென்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டெனிஸ்

## உலக சாம்பியன் மாக்கிரட்ஸ்மித் தோற்கடிக்கப்பட்டார்!

பாரிஸ், ஜூன் 5

ஒற்றையர் (பெண்கள்) "டெனிஸ்" ஆட்டத்தில் உலக சாம்பியன்களாக இருவர் நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற தேர்வுப் போட்டியில் தோல்வி கண்டனர்.

இங்கு நடைபெற்ற தேர்வுப் போட்டியில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உலக டெனிஸ் 'சாம்பியன்' மார்க்கிரட் ஸ்மித்தை அமெரிக்காவைச் சேர்ந்த நான்ஸி றிச்சி (6—1, 6—3) தோற்கடித்தார். மற்றுமொரு உலக சாம்பியனான பிரேஸிலைச் சேர்ந்த மரியா பியுனோவை பிரிட்டனைச் சேர்ந்த திருமதி ஆன் ஜோன்ஸ்(4-6, 8-3) தோற்கடித்தார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை ஒற்றையர் பெண்களுக்கான உலக டென்னிஸ் சாம்பியன் போட்டியின் இறுதித்தெரிவு நடைபெறுகிறது. இதில் நான்ஸி றிச்சியும் ஆன் ஜோன்ஸும் கலந்து கொள்வார்கள்,

## தேர்தல் ஆட்சேப வழக்குகள்

கொழும்பு, ஞாயிறு

இரண்டு தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணைகள் நேற்று ஆரம்பமாகின. கொலன்னாவ தேர்தல் ஆட்சேப வழக்கு, நீதியரசர் ரி. எஸ். பெர்னாண்டோ முன்னிலையிலும் றத்தோட்ட தேர்தல் ஆட்சேப வழக்கு நீதியரசர் திரு. ஏ. எச். டபிள்யு. அபயசுந்தர முன்னிலையிலும் நடைபெறுகின்றன.

## சாவகச்சேரி இந்து முதலிடம்

சாவகச்சேரி, சனி

தென்மராட்சி பகுதியிலுள்ள 9 பாடசாலைகளின் சாரணர் பாசறை நிகழ்ச்சிகள் மூன்று தினங்கள் சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன. இந் நிகழ்ச்சிகளில் 160 சாரணர்கள் கலந்து கொண்டனர்.

பாசறை நிகழ்ச்சிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி சாரணர் குழு முதல் இடத்தை பெற்றது, இரண்டாவது இடத்தை மட்டுவில் மகா வித்தியாலய சாரணர் குழுவும், மூன்ருவது இடத்தை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி சாரணர் குழுவும் பெற்றது.

முதலாவது இடத்தை பெற்ற இந்துக் கல்லூரி சாரணர் குழு தலைவன் செல்வன் எம். செல்வரத்தினத்திற்கு திருமதி கே. இராமச்சந்திரன் கேடயத்தை பரிசாக வழங்கினர்.

## தாதிகளில்லாத ஆஸ்பத்திரி

பண்டாரவளை, ஞாயிறு

பண்டாரவளை ஆஸ்பத்திரியில் தாதிகள் எவரும் இல்லாததால் நோயாளர்களுக்கு வீண் சிரமமும் கஷ்டமும் ஏற்படுகிறது. டாக்டர்களே இவர்களது வேலையையும் கவனிக்கவேண்டியுள்ளது.

## ஹாக்கிப்போட்டி: இருபிரிவுகளிலும் மகாஜனு வெற்றி

யாழ்ப்பணம் திங்

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் கனகரெத்தினம் மத்தியமகாவித்தியாலயத்துக்குமிடையே 1-ம் 2-ம் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற ஹாக்கிப் போட்டிகள் இரண்டிலும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை வெற்றியீட்டியது.

முதலில் நடைபெற்ற 2ம் பிரிவுக்கான போட்டியின் ஆரம்பத்தில் இரு கோஷ்டிகளுமே காரசாரமா விளையாடின. இடைவேளைக்கு முன் மகாஜனக் கல்லூரி ஒரு கோலைப் போட்டது. இடைவேளையின்போது கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஒருகோலும் எடுக்காத வகையில் மகாஜனக் கல்லூரி ஒரு கோல் பெற்றிருந்தது. இடைவேளையின் பின்னர் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. இரு கோஷ்டிகளும் ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டன. இப்போட்டி முடிவில் மகாஜனக் கல்லூரி 1—0 கோலால் கனகரெத்தினம் மகாவித்தியாலயத்தைத் தோற்கடித்தது.

முதற்பிரிவில்

இம்போட்டியை அடுத்து இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையே ஆரம்பமான 1ம் பிரிவுப் போட்டி விறுவிறுப்பாகவிருந்தது. மகாஜனக் கல்லூரியின் மத்திய முன்னணி வீரர்களின் விளையாட்டுத்தரம் ரசிப்பாகக் காணப்பட்டது. இவர்கள் இடைவேளைக்கு முன் அடுத்தடுத்து மூன்று கோல்களை மின்னல் வேகத்தில் போட்டனர்.

இடைவேளையின் போது கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஒரு கோலும் எடுக்காத வகையில்மகாஜன வீரர்கள் 3 கோல்கள் பெற்றிருந்தார்கள். இடைவேளையின் பின்னர் நடைபெற்ற போட்டியில் கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலய வீரர்களின் விளையாட்டு அபாரமாகக் காணப்பட்டது மகாஜனு பின்னணி வீரரான ஜனு பல தடவை கோலடிக்க முயற்சித்தபோதும் எதிர்க்கோஷ்டியின் சில்வஸ்ர அவற்றை வெற்றிகரமாக பலதடவை தடை செய்தார். இப்போட்டி முடிவில் மகாஜனக் கல்லூரி 3—0 கோல்களால் கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தை வெற்றியீட்டியது. கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு பூபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

நெடுந்தீவு

## படகுசேவை பழுதடைந்ததால் கட்டணம் உயர்வு

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவுக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையேயான மோட்டார்ப்படகுச் சேவையிலிருந்த 'இராஜேஸ்வரி' பழுதடைந்ததில் இருந்து மூன்றுநாள் தடைபட்டிருந்தபின் "எலாரு" மோட்டார் வள்ளம் தனது ஆமைவேகத்தில் சேவையை ஆரம்பித்துள்ளது.

நெடுந்தீவு மோட்டார்ச் சேவையில் 'இராஜேஸ்வரி' 'சில்வஸ்பிறே', 'எலாரு' ஆகிய மூன்று மோட்டார்ப் படகுகளும் இதுகாலவரையும் ஈடுபட்டிருந்தன. ஆனால் 'சில்வஸ்பிறே' யும் 'எலாரு'வும் பழுதடைந்தமையால் 'இராஜேஸ்வரி' மட்டும்தான் சேவையிலீடுபட்டிருந்தது. திடீரென இராஜேஸ்வரி பழுதடைந்ததும், வேறுவழியின்றி குறைவான நிலையில் பழுதடைந்திருந்த எலாரு தனது சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

கடும்காற்றும், கடற்கொந்தளிப்புமாய் இருக்கும் இப்பயங்கரவேளையில்அதன் சாரதி தனது சாமர்த்தியத்தால் இச்சேவையை நடத்திவருகிறார். இதுவும் எத்தனை நாளைக்கோ. பெரும்பாலான பெண்கள் தமது பிரயாணங்களை பயத்தின் காரணமாக நிறுத்திக் கொண்டார்கள். பிரயாணக்கட்டணமாக இரண்டு ரூபா வசூலிக்கப்படுகிறது சாதாரண கட்டணம் 75 சதம் என்பது குறிப்பிடத்தக்கது.


அரிய சந்தர்ப்பம்!

தவறவிடாதீர்கள் !!



இந்திய திரைப்பட
ஹாஸ்ய ஜோடிகளின் யாழ். நகர விஜயம்

"டணல்" "டூப் மாஸ்டர்"
"பைரவா" "ஆளை விடு"

ஆகிய ஹாஸ்ய பாகங்களில் நடித்து உங்கள் அபிமானம் பெற்ற
" ஹாஸ்ய மன்னன் டணல் "

K. A. தங்கவேலு - M. சரோஜாவுடன்

25 சினிமா நட்சத்திரங்கள் சேர்ந்து நடிக்கும் நாடகங்கள்

9-6-66 " மனைவியின் மாங்கல்யம் "
10-6-66 " விமலா "
11-6-66 " பம்பாய் மெயில் "

மாலை 6-30 மணியளவில்

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில்

கன்னாதிட்டி ஸ்ரீ காளிகாதேவி ஆலய திருப்பணி நிதிக்காக நடைபெறும்.

பிரவேசம்: ரூ. 10, 5, 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட் டெஸ்ட்

# மேற்கிந்தியா இன்னிங்ஸ் வெற்றி

## 2-வது இன்னிங்ஸில் இங்கிலாந்து பகீரதப்பிரயத்தனம்!

மான்செஸ்டர், ஜூன் 4

இங்கு நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்டில், இனிங்ஸாலும் 40 ஓட்டங்களாலும் மேற்கிந்திய கோஷ்டி இங்கிலாந்து கோஷ்டியை வெற்றி பெற்றது, இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து தப்புவதற்கு இங்கிலாந்து கோஷ்டி மேற்கொண்ட பகீரத பிரயத்தனம் தோல்வி கண்டது. இங்கிலாந்து கோஷ்டியைச் சேர்ந்த புதிய வீரர் மில்போன் 94 ஓட்டங்கள் எடுத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கும்மேற்கிந்தியாவுக்குமிடையே நடைபெறும் முதலாவது கிரிக்கெட்டெஸ்டின் மூன்ருவது நாளான இன்று இங்கிலாந்து கோஷ்டி தனது முதல் இனிங்ஸை தொடர்ந்துவிளையாடி 167 ஓட்டங்களுடன் தனது ஆட்டத்தை முடித்துக்கொண்டது இன்று விளையாடியஇருவீரர்களும்மொத்தம் 4 ஓட்டங்களே எடுத்திருந்தனர்.

இதன்பின்னர் இங்கிலாந்து தனது இரண்டாவது இனிங்ஸைத் தொடர்ந்து விளையாடினர் இன்று நடைபெற்ற இரண்டாவது இனிங்ஸ் பாராட்டக்கூடிய முறையில் இருந்தது 95நிமிடங்களில் 109 ஓட்டங்களை எடுத்தது குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்

### ஸ்கோர் விபரம் வருமாறு

முதல் இன்னிங்ஸ்

மேற்கிந்தியா: 484
இங்கிலாந்து: 167

இரண்டம் இன்னிங்ஸ்

இங்கிலாந்து: 277

## அதிகபட்சமாக எவ்வளவு துணிவாங்கலாம்?

### உச்சவரம்பு ஏற்படுத்த அரசாங்கம் முடிவு

கொழும்பு, சனி

ஒருநபர் அதிகப்படியாக எவ்வளவு துணி தனிப்பட்ட முறையில் வாங்கலாம் என்பது பற்றிய ஒரு கட்டுப்பாட்டை அரசாங்கம் விரைவில் ஏற்படுத்தும்.

ஒத்திவைப்புப் பிரேரணையின் போது, விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் பற்றி பதில் வர்த்தக மந்திரி திரு. எஸ். ஏ. பீரிஸ் பிரதிநிதிகள் சபையில் அறிக்கையொன்றை சமர்ப்பித்த போது மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

விலைக் கட்டுப்பாட்டுச்சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சில தனிப்பட்ட நபர்கள் ஏராளமான அளவில் ஜவுளிகளை வாங்குவது தெரியவந்துள்ளது. எனவே ஒருவர் அதிகப்படியாக எவ்வளவு துணிவாங்கலாம் என்பதுபற்றி ஒரு உச்சவரம்பு ஏற்படுத்த வேண்டியது அவசியம் என பதில் மந்திரி கூறினர்.

நடக்காது

"சில வர்த்தகர்கள் தமது செல்வாக்கைப் பயன் படுத்தி சட்டம் அமுல் ஆவாதை தாமதப்படுத்த முயற்சிகள் செய்தார்கள், ஆனுல் அது நடக்காது" என்று மந்திரி கூறியபோது சபையின் இரு பகுதியிலுமிருந்து பாராட்டுக்களும் கரகோஷமும் எழுந்தன.

இருப்புச் சாமான்கள், டயர்கள் மற்றும் மோட்டார் உதிரிப்பாகங்கள் ஆகியவை மீதும் விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட விருப்பதாக மந்திரி கூறினர்,

பிரதிநிதிகள் சபையில்

## தவருனதகவல் கொடுத்தாராம்

### உபமந்திரிமீது டாக்டர் பெரேரா குற்றச்சாட்டு

கொழும்பு, சனி

தேசியமய சேவைகள் அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி மே மாதம் 22-ம் திகதி தாம் கேட்ட ஒரு கேள்விக்கு தவருன தகவல் கொடுத்ததின் மூலம் சபையின் ஒழுங்குகளை அவர் மீறிவிட்டதாக ஒழுங்குப் பிரச்சினையொன்றை இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் டாக்டர் என். எம். பெரெரா கிளப்பினர்.

முற்ருக உண்மைக்கு மாருன தகவலை அவர் தமக்கும் சபைக்கும் கொடுத்திருப்பதாக டாக்டர் பெரேரா குற்றஞ் சாட்டினர்.

பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்துக்குச் சொந்தமான ஒரு இடத்தை வாடகைக்கு விடுவது பற்றியது அக்கேள்வி.

சபையில் அறிக்கைகள் விடுவதற்கு முன் மந்திரியும் அவருடைய காரியதரிசியும் அதுபற்றி முதலிலேயே சரியாக ஆராயவேண்டும் என்று டாக்டர் பெரெரா குறிப்பிட்டார்.

தாம் இதுபற்றி ஆராய்வதாக சபாநாயகர் கூறினர்.

## ஒரு கடையில் மட்டும் கட்டுப்பாட்டு விலைக்கு ஜவுளி!

யழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலுள்ள ஜவுளிக்கடைகள் பலவும் மூடப்பட்டிருக்கும் இச்சமயத்தில் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் புடவைக்கடையில் நேற்று பெருந்திரளானமக்கள் நீண்டநேரம் கியூவில்நின்று துணிகள் வாங்கினர். டெரிலின் உட்பட பலவித புடவைகளும் துணிகளும் கட்டுப்பாட்டு விலைக்கு வாங்கிச் சென்றனர்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 6ம் திகதிஅசசிட்டுவெளியிடப்பட்டது

## யாழ். மாநகரசபை கமிஷன் நியமனம்

### உள்ளூராட்சி உத்தியோகத்தர் சங்கம் எதிர்ப்பு

கொழும்பு, சனி

கலைக்கப்பட்ட யாழ்ப்பாண மாநகரசபையின் விசேஷ கமிஷனராக மாநகரசபைக் கமிஷனரை நியமித்து, அவரிடம் நிர்வாகப் பொறுப்புக்களை கவர்னர் ஜெனரல் ஒப்படைக்கத் தவறியது குறித்து உள்ளூராட்சி மன்றநிர்வாக உத்தியோகத்தர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றக் கமிஷனர்கள், காரியாதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட மேற்படி சங்கம் தமது வருடாந்தக் கூட்டத்தில், ஸ்தலஸ்தாபனசபைகள் கலைக்கப்படும் சந்தர்ப்பங்கள் எழும்போது, விசேஷ கமிஷனராக ஸ்தலஸ்தாபனசபை நிர்வாகத்தில் பழுத்த அனுபவமும், விசேஷ பயிற்சியும் திறமையும் கொண்ட மாநகரகமிஷனரையும், சிரேஷ்ட காரியதரிசியையும் நியமிக்கும்படி ஸ்தலஸ்தாபன மந்திரியை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேறியது

## ஒழிக்கப்பட்ட மாநகரசபைபதவிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஒழிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகரசபை மராமத்து என்ஜினியர், மின்சார சுப்ரீண்டன் பதவிகளை மீண்டும் ஏற்படுத்துவது சம்பந்தமாக புனராலோசனை செய்து அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறு மாழ். மாநகரசபை நிர்வாகத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள கமிஷனர்களில் ஒருவரான திரு. என் நடேசன் கேட்கப்பட்டுள்ளார், மாநகரசபைக் கமிஷனை இந்தஅறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை கலைக்கப்படுவதற்கு முன்னுல் கடைசியாக நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்திலேயே இந்தப்பதவிகள்ஒழிக்கப்படுவதெனத் தீர்மானிக்கபபட்டது

## 15000 மைல் நீள ரஸ்தா பூர்த்தி

புதுடில்லி, ஜூன் 5

15000 மைல் நீளமான தேசிய நெடுஞ்சாலையின் அமைப்பு வேலை அநேகமாக முடிவுற்றதென்றும், இன்னும் 250 மைலுக்குச் சற்று அதிக தூரமே முடிவடையவிருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

மொத்தம் 250 பாலங்களில் 150 பாலங்களின் அமைப்பு ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது. இன்னும் 250 கோடி ரூபாய், பாக்கிவேலைகளுக்காகச் செலவழிக்கப்படும்.

## ஜி. சி. ஈ. பரீட்சை பெறுபேறுகள்

### பூரணமாக விசாரிக்க குழு நியமிக்கப்படும்

கொழும்பு, சனி

ஜி. சி. ஈ. (சாதாரணப் பிரிவு)பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்பட்டது சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து பூரணமாக விசாரணை செய்வதற்கு அதிகாரிகள் குழுவொன்றை நியமிக்கவேண்டும் எனறு அரசாங்க பாராளுமன்றக் குழுஇன்று முடிவு செய்தது.

விடைத்தாள்கள்திருத்தப்பட்டதில் ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருப்பதாக பல அங்கத்தவர்கள் குழுக்கூட்டத்தில் பிரஸ்தாபித்தார்கள்.

விடைத்தாள்கள் திருத்தப்பட்டதில் பாரதூரமான ஒழுங்கீனங்கள் இடம் பெற்றிருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டினுர்கள். சில மாணவர்கள் தாம்பரீட்சைக்கு எடுக்காதபாடங்களில் தோல்வியுற்றிருப்பதாகஅறிவிக்கப்பட்டிருக்கிறது என்றும்,சில பௌத்த பிக்குகளுக்கு தையல் பாடங்களில் சித்தியடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள தென்றும் அங்கததவர்களில்பலர் குறிப்பிட்டார்கள்.

கல்விஇலாகாவால் நியமிக்கப்படவிருக்கும் விசாரணைக் குழுவின்முன்சாட்சியமளிக்க கல்லூரி அதிபர்களும், விடைத்தாள்களில் தவருன புள்ளிகள் இடப்பட்டதின் காரணமாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

விற்பனைக்கு

காணி

பெரியவிளான் தெல்லிப்பளை ரோட்டில் பெரிய விளானிலிருந்து 1/2 மைல் தூரத்தில் ரோட்டின் வலதுகரையிலுள்ள வீடு கட்டக்கூடிய கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு பொ. யோ. வேதநாயகம், ஒப்பால் கலத் தோட்டம், கம்மடுவ என்ற விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். 507

ஸ்தலஸ்தாபன

## மந்திரி மீது நம்பிக்கை இல்லாப் பிரோரணை எதிர்க்கட்சியினர் தாக்கல்செய்வர்

### மாநகரசபை கலைக்கப்பட்டதின் எதிரொலி

— நமது நிருபர் நடராஜா —

கொழும்பு, சனி

ஸ்தலஸ்தாபன மந்திரி திருச்செல்வம்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை பிரதிநிதிகள் சபையில் தாக்கல் செய்ய எதிர்க்கட்சியினர் முடிவுசெய்திருக்கின்றனர்.

இந்தப்பிரேரணைக்குச் [illegible]தகமாக கையெழுத்துச்சேர்ப்பதில் நேற்று எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் பல[illegible] ஈடுபட்டிருந்தனர்.

எதிர்க்கட்சித்தலைவர் [illegible]நிமதி பண்டாரநாயகா, டாக்டர் என். எம். பேரேரா, திரு. பீட்டர் கெனமன் ஆகியவர்கள் ஏற்கெனவே இப் பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாநகரசபை நெல்லியடி பட்டினசபை, ஹினிதும பட்டினசபை ஆகியவை கலைக்கப்பட்டதை ஆடசேபித்தே இப்த நம்பிக்கை இல்லாப்பிரேரணையை எதிர்க்கட்சியினர் கொண்டு வரவிருக்கின்றனர்.

இந்த ஸ்தலஸ்தாபன [illegible] ஜனநாயகத்துக்கு முரணுன செய்கையென்றும், இதனுல் நாட்டின் மக்கள் ஸ்தலஸ்தாபன மந்திரிமீதும் அராாங்கத்தின்மீதும் நம்பிக்கை இழந்துள்ளனர் என்று இந்த எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாநகரசபை கலைக்கப்பட்டதற்கு அரசியல் அடிப்படைதான் காரணமென்றும் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் குற்றஞ்சாட்டவிருக்கின்றனர்

இந்தப் பிரேரணை பிரதிநிதிகள் சபையில் என்று சமர்ப்பிக்கப்படுமென்று தெரியவில்லை. ஆனுல் இரண்டொரு தினங்களுக்குள் தாக்கல்செய்யப்படலா மென்று தெரிகிறது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org